
# இலக்கு

வைகாசி-ஆனி 1984 சுவடு - 2

வாழ்வினதும் மரணத்தினதும்
நடுக்கங்களில் இருந்து
புதிய வாழ்வொன்று கிளர்ந்தெழும்

அது எழவே செய்யும்




அரசியல்
தத்துவார்த்த
விமர்சன ஏடு

www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

வெகுஜனத் தொடர்பு என்பது வெடிகுண்டுகளைக் காட்டிலும் வலிமையானது.

இது இரண்டாவது இலக்கு. இத்தனை பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் இதனை வெளிக் கொணர்வதிலுள்ள சிரமங்களை வாசகர்கள் நன்கு உணர வேண்டும். விடுதலைப் போராட்டத்தை சரியான திசை வழியில் நெறிப்படுத்தவும், விடுதலைப் போராளிகளுக்கு சிந்தனைத் தெளிவையும், உறுதியையும் கொடுக்கும் நோக்குடனும் இலக்கு வெளிவந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் வெளிவரும். இதற்கு வாசகர்கள் தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்வார்கள் என எதிர்பார்த்துநிற்கிறோம்.

இதழ் ஒன்றுக்கு
அன்பளிப்பாகக் கொடுக்க
வேண்டியது 3 ரூ. 50 சதம்.

# இலக்கு

## இன அழித்தொழிப்பிலிருந்து மக்களைப் பாதுகாப்போம்?

அண்மையில் வெளிவந்த இந்தியா 'டுடே' இதழொன்றிற்கு ஜே. ஆர். அளித்திருந்த பேட்டி மிகவும் தெட்டத்தெளிவாக ஜே. ஆரினதும் அவனது யூ.என்.பி. பாசிச வெறியர்களினதும் உண்மைச் சொரூபத்தை வெளிப்படுத்தியுள்ளது. இந்திய ஆக்கிரமிப்பு ஒன்று நடக்குமானால் இலங்கைத் தமிழினத்திற்கு அதுவே இறுதியாக இருக்குமென மிகத் திமிருடன் ஜே. ஆர். அறிவித்திருக்கிறான். இந்த அறிவிப்பு அவனது சமீபகால அறிவிப்புக்கள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல தெட்டத்தெளிவாக அவர்களது கொடிய திட்டத்தை விளக்குவதாக உள்ளது. கொஞ்ச நாட்களுக்கு முன்புவரை இந்திய அரசு பற்றியும் அதன் ஆக்கிரமிப்புக்கான வாய்ப்புக்கள் பற்றியும் மிகவும் அச்சத்துடன் உச்சரித்துக்கொண்டே இந்த ஜே. ஆர். மிகவும் படு கேவலமான ஒரு பச்சை இனவாதியேதான் என்பதை மிகவும் உறுதிப்படுத்தும் விதத்தில் தமிழினத்தையே அழிப்பதாய்ப் பேசி இருக்கிறான் என்றால் அது ஒன்றும் தற்செயலானதல்ல.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சு வார்த்தைக்கு ஒழுங்கு செய்துகொண்டே, காரணமின்றி அதை இழுத்தடித்துக்கொண்டே மிகவும் வேகமாய்த் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளான். ஜே. ஆர். பலரக நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ளான். ஏவல் படைகளைப் புதிய படைப் பிரிவுகளாகப் புதிய பயிற்சிகளுக்கு உள்ளாக்கிறான். தன்னை ஏகாதிபத்தியங்களினதும், உலகப் பிற்போக்காளர்களதும் விசுவாசியாகக் காட்டிக் கொள்ளும் விதத்தில் தமிழீழ விடுதலைப் போராளிகளை கம்யூனிஸ்ட்டுக்கள், புரட்சிக்காரர்கள், மார்க்ஸிய வெறியர்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்தான். (சர்வதேச ரீதியாக இன்று விடுதலைக்காகப் போராடி வருகின்ற ஒடுக்கப்பட்ட மக்களையும் விடுதலை வீரர்களையும் பிற்போக்குக் கும்பல்கள், சர்வதேச பயங்கரவாதிகள் என்றும் மார்க்ஸிஸப் பிசாசுகள் என்றும் பிரச்சாரம் செய்வது ஒன்றும் வியப்பானதல்ல.)

அமெரிக்காவின் நவீன பாணி ஆயுதங்களையும், அழித்தொழிப்பு உத்திகளையும் பெற்றுக்கொண்டான். தேசிய பந்தோபஸ்து என்ற பெயரில் புதிய அமைச்சொன்றை உருவாக்கி தமிழீழப் பகுதியில் ஒரு நேரடி பாசிச அடக்குமுறைக்குத் தயாராகிவிட்டான். ஏவற்படைகளுக்கு நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை சுட்டுப் பொசுக்குகின்ற அதிகாரங்களை வழங்கி, இந்த ஏவல் படை உயர் அதிகாரிகளுக்கு சம்பள உயர்வையும் அதிகரித்தான். கடற் பிரதேசங்களில் பயங்கர ஆயுதங்களுடன் கடற்பிசாசுகளாகக் கடற்படையினர் அட்டகாசம் புரிந்து உள்ளூர் தமிழ் மீனவர்களின் உழைப்பிற்கு தடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் கடற் பிசாசுகளை மேலும் வலுப்படுத்த விசேட ஆயுதங்களும் இயந்திரப் பட்குகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன. தேசம் பரந்து இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. விமானப்படைகள் கெலிகப்ரர்களில் துருவு விளக்குகளுடன் உலவி வருகிறார்கள். இவ்வாறு மூன்று முனைகளிலும் தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இவ்வளவையும் வேகமாகச் செய்து முடித்து விட்ட நிலையில்—தமிழ் மக்களுடன் நேரடியான பாசிச அடக்குமுறைக்குத் தயாராகிவிட்ட நிலையில்—இப்படி ஒரு போட்

**இனியொரு விதி செய்வோம்!**
**அதை நாளும் காப்போம்!**

டியை ஜே.ஆர் அறிவித்திருக்கிறான். நாளுக்கு நாள் அப்பாவி இளைஞர்களைக் கைது செய்வதும், அடித்து நொருக்குவதும், சுட்டுப் பொசுக்குவதுமாக அரசின் நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் புத்தாண்டு தமிழீழ இரத்தக் களரிகளின் மத்தியில் வந்து போயிற்று. தெருவோரத்தில் மக்களைச் சுட்டுத் தள்ளவும், அவர்களைக் குற்றுயிர்களாகவே தீயிட்டுப் பொசுக்கவும் எந்த நேரமும் இராணுவம் தயார் நிலையில் கவச வாகனங்களில் தமிழீழ வீதியெங்கும் ஓடித் திரிகிறது. விசாரணை எதுவுமின்றி துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது இன்றெல்லாம் சாதாரணமான, வெகு அற்பமான விடயமாகிப் போய்விட்டது. அண்மையில் சுன்னாகத்திலும், யாழ்ப்பாணத்திலும் நடந்த சம்பவங்கள் இதற்கு நல்ல வரலாற்று உதாரணங்கள் ஆகும்.

தமிழீழத் தேசியத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் குதித்துள்ள போராளிகளை மட்டுமல்ல, ஈழத் தமிழர்களையுமே அழிக்கும் கொடிய எண்ணத்துடன் ஒரு நவீன கிட்லராக இந்த ஜே. ஆர். திமிருடன் தயாரித்திருக்கும் இந்தப் போட்டியானது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் குதித்துள்ள, சகல இயக்கங்களுக்கும் மக்கள் இயக்கத்தின் அவசியத்தை நன்கு உணர்த்தி இருக்குமென நம்புகிறோம். இன அழித்தொழிப்பின் நோக்கில் எதிரி தன்னை பூரணமாகத் தயார் செய்து விட்டான். எதிரி தன்னை பூரணமாகத் தயார் செய்து கொள்வதற்கான சூழலை எமது இயக்கங்கள் தமது தவறான நடவடிக்கைகள் மூலமாக உருவாக்கிவிட்டன. இங்கு ஓரளவு ஜனநாயக சூழல் நிலவிய காலத்தில் மக்களைத் தயார் செய்கின்ற செயல்களில் ஈடுபடுவதில் இவை அவ்வளவு அக்கறை காட்டவில்லை. அதுமட்டுமல்ல, இன்றும்கூட எதிரிகளின் தயாரிப்பு மிகவும் வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இவ்வேளையிலும்கூட எமது மக்களைத் தயார்ப்படுத்தும் செய்கைகளில் அவ்வளவு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இந்த நிலையிலும் எமது மக்களைத் தயார் செய்வதில்

இலங்கைக்கான இவ்வருட உதவியை மேலும் அதிகரிப்பது என்று அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது. அண்மையில் வெளியான தகவலின்படி 1984 1985ம் ஆண்டிற்கான அமெரிக்க உதவி 10 கோடி டாலராக அதிகரிக்கும். அமெரிக்காவின் உதவி தற்போது புணமரகவும், பொருளாகவும் அபிவிருத்தி வேலைகளுக்காகவும் கிடைத்து வருகின்றது.

—நன்றி : ஈழமுரசு, முரசு-1, முழக்கம்-20

அக்கறையற்று இருப்போமாயின் நாம் முற்று முழுதாக அழிக்கப்படுவோம் என்பதில் சந்தேகமே இல்லை. அண்மைக்கால சம்பவங்கள் இதை நன்கு உறுதிப்படுத்துகின்றன என்பதை எமது இயக்கங்கள் நன்கு புரிந்துகொண்டிருக்கும் என நம்புகிறோம்.

இன்று எம்மத்தியிலுள்ள பிரதான பணியானது எமது மக்களைப் போராட்டத்திற்குத் தயார்ப்படுத்தி, ஒரு மக்கள் போராட்டமாக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் விதத்தில் அவர்களை தயார் செய்து ஆயுதபாணிகளாக்குவதே. தற்போது நெருக்கடி மிகவும் முற்றியுள்ள இந்த நிலைமையில் இது மிகவும் சிக்கலானதாயினும், இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்பதால் உடனடியாகவும் அவசியமாகவும் இது செய்யப்படவேண்டும். சுன்னாகம், யாழ்ப்பாணம் சம்பவங்கள் சிறு குழுத்தாக்குதலால் மட்டுமே அல்லது தனிக்கொரில்லாத் குழுக்களால் மக்களைப் பாதுகாக்க முடியாது என்பதை நிரூபித்து நிற்கின்றன. எனவே, பரந்த மட்டத்தில் மக்களை ஸ்தாபன ரீதியில் ஒன்று திரட்டி போராட்டத்திற்கு தயார்செய்வதும், தற்பாதுகாப்புக்கும் போராட்டத்தில் உறுதியான வெற்றிக்கு உத்திரவாதமளிக்கும் விதத்தில் செயல்படுவதும் தவிர்க்கமுடியாத உடனடிக் கடமைகள் என இலக்கு வலியுறுத்துகிறது.

பரந்துபட்ட மக்களை பாதுகாக்கும் விதத்திலும், அவர்கள் போராட்டத்தின் நேரடிப் பங்காளிகளாக்குகின்ற விதத்திலும் மக்கள் போராட்ட அணிகளை கட்டுவதில் இலக்கு முன்னின்றுஉழைக்கும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறது. ●

# தமிழ் மாணவர் போராட்டத்தின் தோல்வியும் ஸ்தாபன ரீதியான ஒன்றிணைப்பின் அவசியமும்!

இடம் பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்களின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் உண்ணாவிரதிகளைக் கடத்தியதுடன் நிறைவு பெற்றது. உண்ணாவிரதிகளைக் கடத்திய செயலை அடாவடித்தனமான செயல் எனக் கண்டனம் செய்து தமிழீழ விடுதலைக் கழகம் சுவரொட்டிகளை ஒட்டியது. தமது செயல் நியாயமானதே என விடுதலைப்புலிகள் இயக்கமும் தன் பங்கிற்கு துண்டுப் பிரசுரங்களை வெளியிடத் தவறவில்லை. ஆக மொத்தத்தில் இயக்கங்களுக் கிடையில் நடைபெற்ற இந்தச் சுவாரிஸ்யமான வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் கல்யாண சந்தடியில் மாப்பிள்ளையை மறந்துபோனதுபோல் மாணவர்களின் எதிர்காலம் பற்றிய விசயம் அடிபட்டுப்போய்விட்டது. மாணவர்கள் இந்தச் செயலைக் கண்டித்தும், தமது போராட்டம் தொடரும் என அறிவித்து. இருந்தபோதும் இயக்கங்களுக்கிடையில் இருந்த சச்சரவுகளுக் கிடையில் அது எடுபடவில்லை. இதற்கு ஒரு வேளை, மாணவப் போராளிகளின் முழுச் சம்மதத்துடனேயே அவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என புலிகளின் துண்டுப் பிரசுரமும் ஓரளவு காரணமாக இருக்கலாம்.

எது எப்படி இருந்தபோதும், புலிகளின் இந்த நடவடிக்கை சரியானதா? தவறானதா? என்ற கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்று ஒரு வார்த்தையில் விடையளிப்பதோ அல்லது இந்த நடவடிக்கைபற்றி விமர்சிப்பதோ எமது நோக்கமல்லை. இந்த மாணவர் போராட்டம் பற்றி எமது இயக்கங்கள் எப்படி ஒரு தவறான கருத்தைக் கொண்டுள்ளன என்பதை ஆராய்வதும் அதனூடாக மாணவர்களது போராட்டம் தனது சரியான பாதை எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென்பதை விளங்கிக் கொள்வதுமே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இம்மாணவர்களது உண்ணா விரதப் போராட்டம் இறுதி நாளை நெருங்கிக்கொண்டிருக்கையில் மாணவர்கள் மத்தியில் பலத்த ஒரு கருத்துப் பிளவு உருவாகிற்று. போராளிகளை சாக விடமாட்டோம் என ஒரு பகுதியினரும் சாகும்வரை போராடுவோம் என இன்னொரு பிரிவினருமாக அவர்களது பிளவு வலுவடைந்தது. இந்த இரு கருத்துக்கும் பின்னணியிலும் ஓரளவு உணர்ச்சிகரமான சூழ்நிலை நிலவியபோதும் இந்தக்கொந்தளிப்பு மிகவும் வேகமுற்றது. உண்ணாவிரதம் நடைபெற்ற இடத்தில் மக்கள் வெள்ளம் திரளத் தொடங்கியது.

மக்கள் மத்தியிலும் என்ன செய்வது என்று தெரியாத ஒரு மிகவும் இக்கட்டான சூழ்நிலை உருவாகியிருந்தது. உண்ணாவிரதப் போராளிகள் சாகவும் கூடாது. அவர்களின் போராட்டமும் வெல்லவும் வேண்டும் என்ற இரண்டு விசயங்களில் கணத்துக்குக் கணம் உண்ணாவிரதிகள் சாகவே கூடாது என்ற விசயம் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. அரசு மட்டத்தில் எந்தவிதமான பொறுப்பான அணுகுமுறையும் கிட்டவில்லை. நிலைமை மிகவும் எக்கச்சக்கமாகிவிட்டது. இந்த நிலையில்தான் புலிகளின் கடத்தல் விசயம் நடைபெற்றது. ஏதோ ஒரு விதத்தில் மாணவப் போராளிகள் மரணத்திலிருந்து மீட்கப்பட்டனர் என்பதில் ஒரு விதத்தில் திருப்தியுணர்வுதான் பல மட்டத்திலும் நிலவியது. என்ன செய்வது என்று அறியாது திகைத்துப் போய் நின்ற மாணவர் ஒன்றியமும் உடன் எதுவும் செய்ய முடியாத நிலையில் உணர்ச்சிவலுவற்றிருந்தது. எந்த நேரத்திலும்

அடைப்பை உடைக்க தயாராக நின்ற சுற்று வெள்ளம். எவ்விடத்தில் சிறு உடைப்பைக் கண்டாலும் அதனூடாக ஓடி அடைந்து விடுவதுபோல இந்த உணர்ச்சி வெள்ளமும் அடங்கி ஓய்ந்தது அதன் பின்னர் தான் ஆற்று வெள்ளம் தவறான இடத்தில் உடைக்கப்பட்டது என்பதும் அது பயனற்று வீணே ஓடிப் போய்விட்டது என்பதும் புரிந்தது பலருக்கு. ஆனல் இந்த உடைப்பை சரியாக ஏற்படுத்த முதலிலேயே பலரும் தயாராக இருக்கவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த மாணவர்களது போராட்டத்தில் மூன்று விதமான போக்குகள் நிலவின. தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இத்தகைய உண்ணாவிரதப் போராட்டங்களையே நிராகரிக்கின்ற போக்கு நிலவியது. தமிழீழத்துக்கான ஆயுதமேந்திய போராட்டத்தில் மாணவர்கள் குதிப்பதே இப்பிரச்சினையைத் தீர்க்கும் என்பது அவர்களது விவாதம். தமிழீழ விடுதலைக் கழகத்திடமோ இத்தகைய போராட்டங்களுக் கூடாகவே வெற்றியை நோக்கி, அதாவது தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற கருத்து நிலவியது. ஆக இவை இரண்டும் தமிழீழ விடுதலையுடன் இந்த மாணவர் போராட்டத்தையும் இணைத்துப் பார்த்தமை, விடுதலைப் போராட்ட வெற்றியே மாணவருக்கு நிரந்தர தீர்வு கிடைக்குமென நம்பினர். அதாவது புலிகள், இதற்கு மாணவர்கள் நேரடியாக போராட்டத்தில் குதிக்க வேண்டும்; அதன் பின்னே மாணவர் சமுதாயம் தம்து உரிமைகளை பெற முடியும் எனக் கருதினர். கழகத்தினரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் அவசியம் அதனூடாகவே மாணவர் சமுதாயம் வெற்றி பெற முடியும் என நம்பினராயினும் அதை இப்படிப்பட்ட சிறு சிறு போராட்டங்களுக் கூடாகவேவளர்த்தெடுக்க வேண்டும் எனக் கருதினர். எனவே அவர்கள் கருத்து நிலையில் இந்த நடவடிக்கைகளை விமர்சித்தனர்.

மூன்றாவது போக்கு இந்த மாணவர் ஒன்றியத்தின் போக்கு. இந்த மாணவர் ஒன்றியம் தனது போராட்டத்தை முன்னெடுக்கையில் இதன் வெற்றி எவ்வளவு சாத்தியமானது என்பதை கருத்தில் எடுக்கவில்லை. முன்னனுபவமின்மை இப்போராட்டத்தில் அவர்களைக் குதிக்க வைத்தது. அவர்கள் தமிழீழ விடுதலையின் அவசியத்தை தமது போராட்டத்துடன் சேர்த்துப் பார்க்கவில்லை. அவர்கள் இந்த அரசுக்குக் கீழே ஏதாவது தீர்வு கிடைக்குமென நம்பினர். இதை ஒரு சட்ட பூர்வ உரிமைப் போராட்டமாகவே அவர்கள் நம்பினர், ஆனல் போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் அரசின் பொறுப்பற்ற போக்கு இவர்களைத் திகிலடையச் செய்தது. சத்தியாக் கிரகப் போராட்ட முறையின் 'வலு' பற்றிய சந்தேகம் இவர்களுக்கிடையே வலுத்தது. இதனல் இவர்களால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை, போராடுபவர்களும் உரிமை கொடுக்க வேண்டியவர்களையும் (அரசு) தவிர்ந்த மூன்றாவது சக்தி இதில் தலையிட்டு போராட்டம் வெற்றி பெறலாம் என நம்பினராயினும் அப்படி நடந்தவையெல்லாம் போராட்டத்தின் வெற்றியை உறுதி செய்யாது போகவே என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தனர். போராட்டத்தை விட்டுவிடுவது சரியானதா? அல்லது இப்படியே தொடர்ந்து சாவது மேலா? செத்தால் மட்டும் வெற்றி நிச்சயமா? என்ற கேள்விகள் இவர்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வரமுடியாத விதத்தில் குழப்பி விட்டிருந்தது.

ஆக இந்த மூன்று போக்கினதும் தவறான தன்மைகள் ஆழமான சிந்தனையுடன் சரியான ஒரு முடிவுக்கு வரமுடியாது செய்திருந்தன. குழப்பமான போக்கு அதாவது அடுத்து என்ன என்பதை உறுதியாக செய்யமுடியாத தெளிவற்ற நிலை புலிகளின் கடத்தலுக்கு இட்டுச் சென்றது.

உண்மையில் இன்று இந்த மாணவர்கள் நிலை என்ன? இவர்களது தியாகம் போராட்டம் இவர்களது கடத்தலால் இடையில் குழப்பப்பட்டு விட்டதா? இக்கடத்தல் நடைபெறுவிட்டால் ஒருவேளை வெற்றி நிச்சயமாயிருந்திருக்குமா? அல்லது கடத்தியதனல் வெற்றிக்கான பாதையில் ஏதாவது முன்

னேற்றம் நடைபெற்றிருக்கிறதா? இப்படிப் பல கேள்விகள் எழுந்த வண்ணம் இருக்கின்றன. இவையெல்லாம் மாணவர் போராட்டத்தையும் அந்த கடத்தலையும் சுற்றிப் பின்னப்படும் கேள்விகளே. உண்மையில் இந்தக் கடத்தல் அல்ல, மாணவர் போராட்டம் குழம்பிப் போனதற்கான காரணம் என்பதை ஆழ்ந்து கவனித்தால் தெரியவரும். ஏனென்றால், கடத்தல் தான் குழப்பத்துக்கும் காரணமாயின், இந்தப் போராட்ட ஒன்றியத்துக்கு மேலும் நம்பிக்கை இருந்தால் போராட்டம் பின்பும் தொடரப்பட்டிருக்கலாம். ஒன்றியம் கடத்தலின் பின் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் அதன் மூலம் சில தற்காலிகமான மாற்றங்களை ஏற்படுத்தவும் முயன்று கொண்டிருக்கின்றது. இது ஒரு வகையில் தொழிற் சங்க போராட்டமாக முன்னெடுக்கப்பட்டதையே இந்தப் போக்கு காட்டுகிறது. உண்மை அவ்வாறிருக்க இந்த மாணவர் போராட்டத்தை ஒரு புரட்சிகரமான அர்த்தத்தில் அதை விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புறுத்திப் பார்த்ததுதான் உண்மையில் எமது இயக்கங்களினது அடிப்படையான தவறாகும்.

உண்மையில் இந்தப் போராட்டத்தின் இன்றைய தோல்விக்குக் காரணம் இங்கு கடந்த காலங்களில் நடைபெற்ற மற்றெல்லாத் தொழிற் சங்கப் போராட்டங்களது தோல்விகட்குள்ள காரணமேயன்றி வேறல்ல இம்மாணவர்களதுபோராட்டம் இந்த அரசுக்குக்கீழான உரிமைகளை வென்றெடுக்கின்றதற்கான ஒரு போராட்டமாக முன்னேடுக்கப்பப்பட்டதே இதன்தோல்விக்கு அடிப்படையான காரணமாகும். இந்த விசயத்தை நாம் விரிவாகப் பார்ப்போம்.

இன்று இலங்கையில் இருப்பது அசல் தரகு முதலாளிய இனவாத யு.என்.பி. அரசு. இந்த அரசு கடந்த காலங்களில் தொழிற் சங்க போராட்டங்களை எவ்வாறு நசுக்கி வந்துள்ளது என்பதும் நாம் அனைவரும் அறிந்ததே. நாற்பதாயிரம் தொழிலாளர்களை நடுத்தெருவில் நிறுத்திவிட சற்றும் தயங்காத அரசு இந்த ஜே. ஆர். அரசு. இத் தரகு முதலாளிய அரசு போராட்ட வடிவங்களை விடவும் போராட்டங்களையே அதிகமாகக் கண்டு அஞ்சுகிறது. எனவே அது அவற்றை எவ்வகையிலேயாயினும் நசுக்கவே முனைந்து நிற்கும். சர்வதேச ரீதியாக பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு தவித்துக் கொண்டிருக்கும் உலகப் பிற்போக்கு வாதிகளின் அணியில் சேர்ந்து கொள்ள இந்த அரசு எத்தகைய ஒரு போராட்டத்தையும் உடனுக்குடன் நசுக்குவதில் மிகவும் உன்னிப்பாக செயல்பட்டுள்ளது. தனது சொந்த நாட்டு மக்களின் சகல நலன்களையும் ஜனநாயக உரிமைகளையும் பறித்தெடுப்பதன் மூலமே தனது இருப்பை தற்காத்துக் கொள்கிறது இந்த அரசு. எனவே இந்த அரசு தனது மக்களின் ஜனநாயக உரிமைகளை வழங்குவதென்பது அது தனது சவக்குழியை தானே தோண்டுவது போலாகும். எனவே அரசிடம் சமரசப் போராட்டங்கள் தொடுப்பதன் மூலமாக ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பது என்பது பகற் கனவாகும். இந்த அரசை உடைத்தெறிவதும், அதிகாரத்தை பரந்துபட்ட மக்கள் தம் கையில் எடுத்துக் கொள்வதுமான புரட்சிகர போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதாலேயே அத்தகைய ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க முடியும். எனவே தவிர்க்க முடியாது ஜனநாயக உரிமைகட்கான போராட்டங்கள் எல்லாம் அரசியல்சம்பந்தப்பட்டவையாகவே இருக்க முடியும். தொழிற்சங்க போராட்டமானது இந்த அரசையும் அமைப்பையும் ஏற்றுக்கொண்டு அதற்குள்ளே சில சலுகைகளை பெற்றுக்கொள்ளவே பயன்படும். ஆனல் இந்த அரசால் இத்தகைய ஜனநாயக உரிமைகளை வளங்குவது சாத்திய மல்லவாகையால், அது இவற்றை வழங்காது. இப் போராட்டங்களையே நசுக்க முயலும் மக்கள் தனது ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க தவிர்க்க முடியாது இந்த அரசை தூக்கி யெறிகிற போராட்டத்தில் அணிசேர வேண்டியது அவசிய மாகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களது ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க எவ்வித சமரசப் போராட்ட முறை

களும் வெற்றியளிக்க முடியாததாலேயே விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் குதித்துள்ளார்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி மூலமே, இந்த அரசின் ஒடுக்கு முறையைச் சீரங்களை அப்புறப்படுத்துவதன் மூலமே, எமது மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க முடியுமென்பது இன்று முடிந்த முடிவாகிவிட்டது. எனவே இந்தப்பல் கலைக்கழக மாணவர்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தையும் இதிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது. மாணவர்கள் தமது ஜனநாயக உரிமைக்கான போராட்டங்களை அரசியல் மயப்படுத்திய ஒரு போராட்டமாக மாற்றாது வெறும் தொழிற்சங்கவாதப் போராட்டமாக முன்னெடுப்பார்களானால் அவர்களால் தாம் நினைக்கின்ற வெற்றியை தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது. எமது பல்கலைக் கழக மாணவர்களது போராட்டம் அரசியல் மயப்படுத்தப் பட்ட ஒரு போராட்டமாக மாற்றப்பட்டதாக அந்த நோக்கில் ஒரு புரட்சிகர மாணவர் அமைப்பாக மாணவர் ஒன்றியம் தன்னை உருவாக்கிக் கொள்ளாததாக இருந்தமையாலேயே இத்தகைய பின்னடைவு ஒன்று ஏற்படுவது சாத்தியமாயிற்று.

அரசியல் ரீதியான போராட்டம் என்று நாம் சொல்லும் போது விடுதலைப் புலிகள் சொல்லும் அதே நேரடி அர்த்தத்தில் நாம் சொல்லவில்லை. அரசியல் ரீதியான போராட்டம் என்பது, நேரடியாக மாணவர்களை தமது கொரில்லா அணியிலோ, இயக்கத்திலோ அங்கத்தவராக இணைப்பதையே அவர்கள் கருதுகிறார்கள். இது அடிப்படையில் தவறானதும் சாத்தியப்பாடு அற்றதுமாகும். பரந்து பட்ட மக்களின் பல்வேறு பகுதியினர் தத்தமது ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னெடுக்க ''கொரிலா'' அணியில் சேரவேண்டுமென்பது ஒரு தவறான வாதமாகும். உண்மையில் மக்கள் தொகுதியினர். தமது உடனடி ஜனநாயக தேவைகளுக்காக போராட முன் வருகிறார்களே அன்றி அதற்கான மறைமுக சாரயான தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக அல்ல. அப்படி அழைப்பது சரியானது அல்ல.

தமது நேரடியான பிரச்சினைக்காக போராட எழுகின்ற மக்கள் அப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் இந்த அரசே என்று தெரிந்திருப்பினும், அரசுக் எதிரான போராட்டத்துக்கு அவர்களைத் தனி நபர்களாக சேர்த்துக் கொள்ள முயல்வது வெற்றியளிக்கப் போவதில்லை. மக்களை தத்தமது ஜனநாயக உரிமைகளுக்காக போராடுகின்ற விதத்தில் அவர்களைப் புரட்சிகர அமைப்பொன்றின் கீழ் அணிதிரட்டுவதும், அதே நேரத்தில் அவர்களது பூரண வெற்றி தேசிய விடுதலையிலேயே தங்கியுள்ளது என்ற நோக்கில் அவர்களை உருவாக்குவதும் அவசியமானதாகும்.

உதாரணமாக, கூலிச் சுரண்டல் மற்றும் உழைப்புச் சுரண்டலுக்கு எதிரான ஜனநாயக போராட்டங்களை தொழிற் சங்கமாக முன்னெடுப்பதற்குப் பதிலாக அரசியல் நோக்கில் செயலாக்க வேண்டும் இந்த அரசினைத் தூக்கி யெறியும் நோக்கில் அரசியல் வேலை நிறுத்தமாக அரசியற்கிளர்ச்சியாக. மேற்கொள்ள வேண்டும்.

இதே விதத்தில் தான் மாணவர் அமைப்பை ஒரு பரந்து பட்ட புரட்சிகர மாணவர் சமுதாயத்தின் அமைப்பாக உருவாக்க வேண்டும் அவர்கள் தமது ஜனநாயக உரிமைகளுக்காக தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான ஒரு புரட்சிகர வெகுசன ஸ்தாபனமாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். பரந்து பட்ட மாணவர்களின் சகல ஜனநாயக உரிமைகளையும் வென்றெடுக்கும் விதத்திலான நோக்கங்களைக் கொண்ட ஸ்தாபனமாக இது அமையும். இந்த ஸ்தாபனம் தமிழீழ மாணவர் சமுதாயத்தின் சகல ஜனநாயக உரிமைகளுக்குமாக போராடுவதாயும் இப் போராட்டங்களுக்கு தேசிய விடுதலையை நோக்கமாகக் கொண்டு செயல்படுவதாயும் இருக்கும்.

தமிழீழத்தைப் பொறுத்த வரையில் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப் படுபவர்களை விடவும் தெரிவு செய்யப்படாது நடுத்தெரு

வில் நிறுத்தப்படும் மாணவர்களின் எண்ணிக்கை பல மடங்கு பெரிதாகும். இங்கு நிலவும் பிற்போக்கு கல்வி முறையானது இங்குள்ள மாணவர்களை வெறும் மலட்டு அறிவாளிகளாகவோ, நாட்டுக்கோ, மக்களுக்கோ பயனற்றவர்களாக உருவாக்கவே பயன்படுகிறது. மக்களுக்கும் தேசத்துக்கும் பயனளிக்கும் விஞ்ஞான பூர்மான கல்வியைக் கற்கவும் நம்பிக்கையான எதிர்காலத்தைப் பெற்றுக் கொள்ளவும் மாணவர் சமுதாயம் அந்த அரசுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது தேசிய விடுதலையாலேயே இத்தகைய ஜனநாயக உரிமைகளை பெறமுடியும் என்ற தொனியுடன் தம்மை ஸ்தாபன மயப்படுத்தி தமது போராட்டங்களை முன்னெடுப்பது மாணவ சமுதாயத்துக்கு மிகவும் அவசியமாகும். இத்தகைய ஒரு புரட்சிகர மாணவரமைப்பு நிச்சயம் அரசியல் நோக்கம் கொண்டதாக இருக்கும்.

இத்தகைய புரட்சிகர ஸ்தாபனமொன்றை உருவாக்குதலில் மாணவர் மத்தியிலுள்ள முன்னேறிய பிரிவினர் அல்லது போராட்டத்துக்கு தயாராகவுள்ள பகுதியினரது தலைமையில் நாம் இந்த ஸ்தாபனத்தினை உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஓரளவு பின் தங்கிய வளர்த்தெடுக்கக் கூடிய இரண்டாவது பகுதியினரை ஸ்தாபனத்திற்காக வென்றெடுத்து முழு மாணவர்களையும் அந்த ஸ்தாபனத்தைச் சுற்றி அணிதிரளச் செய்வது அவசியமான தாகும்.

இத்தகைய ஒரு புரட்சிகர ஸ்தாபனம் மூலமாகவே மாணவர்களது போராட்டங்களை உறுதியாக நின்று நடாத்த முடியும். அல்லாது போயின் மற்றெல்லா தொழிற் சங்க போராட்டங்களைப் போலவே இவையும் காட்டிக் கொடுக்கப்பட்டு விடும்.

மாணவர்களை சரியான புரட்சிகரமான ஸ்தாபனமாக அணிதிரட்டுவதை விடுத்து இயக்கத்தின் அங்கத்தவர்களாக மாற்ற முயல்வ தென்பது மாணவ சமுதாயத்தின் போராட்டங்களை சிதைப்பதற்கு ஒப்பானதாகும். இது மாணவர்களது நடைமுறைப் பிரச்சினைகளுக்கு சரியாக வழிகாட்ட, அவர்களை விடுதலைக்குப் பின் ஒரு பயனுள்ள சமுதாயமாக உருவாக்க முயலாது அவர்கள் போராட்டத்தை குழப்பிவிடு வதற்கு ஒப்பானதாகும்.

அன்பான சடலங்களே! நீங்கள்தான் ஒரு காலத்தில் எனது தாயகத்தின் நம்பிக்கையாக விளங்கினர்கள்! உங்களது சாம்பலை எனது நெற்றியில் பூசுங்கள்! உங்களது குளிர்ந்த கரங்களால் எனது இதயத்தை வருடுங்கள்! எனது காதுகளில் ஒலியுங்கள்! எனதுபுலம்பல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொடுங்கோலனின் கண்ணீராக மாறட்டும்! என்னைச் சுற்றி நில்லுங்கள்! என் அருகில் திரியுங்கள் உங்களது எண்ணங்களை எனது ஆத்மா உள் வாங்கட்டும்! கல்லறையின் பயங்கரத்தை எனக்களியுங்கள். இழிவான சங்கிலியால் பிணைப்புண்டு ஒருவன் வாடும்போது கண்ணீர் மழை போதாது!

**- காஸ்ரோ**

நன்றி : வரலாறு என்னை விடுதலை செய்யும்

**அரசியல் என்பது இரத்தம் சிந்தாப் போர்**
**போர் என்பதோ இரத்தம் சிந்தும் அரசியல்.**

**-மாவோ**

எனவே தற்போதைய மாணவர் மத்தியிலான உடனடிக் கடமை, அவர்களை புரட்சிகரமான ஒரு மாணவர் அமைப்பாக ஸ்தாபனமாகக் கட்டி எழுப்புவதும் அதனூடாக சகல மாணவர் சமுதாயத்தினதும் ஜனநாயக போராட்டங்களை முன்னெடுப்பதுமேயாகும். இத்தகைய ஒரு முயற்சி மேற்கொள்ளப்படாத பட்சத்தில் மாணவர் சமுதாயம் தனது போராட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்த முடியாது.

# மக்கள் யுத்தப் பாதையில் நம் மத்தியிலான இயக்கங்கள்

## 1

கடந்த காலங்களில் சோசலிசம் என்ற வார்த்தைக்கு என்ன நடந்ததோ அதுதான் இன்று மக்கள் யுத்தம் அல்லது மக்கள் போராட்டம் என்ற வார்த்தைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சோசலிசம் என்ற வார்த்தையை எப்படி கிட்லர் முதல் ஜே ஆர். வரை பார்க்க வேண்டுமானுல் உச்சரித்துவிட்டுப் போகின்ற ஒரு வெற்றுச் சொல்லாக்கப்பட்டதோ அதே நிலமை இந்த மக்கள் போராட்டத்திற்கும் ஏற்பட்டிருக்கின்றது.

வழக்கிலே செல்வாக்கில் உள்ள புரட்சிகரமான சொற்களை உச்சரிப்பதன் மூலம் தம்மை புரட்சிகரமான வர்க்கங்களாகக் காட்டிக் கொள்ள எல்லா காலங்களிலும் முயற்சிகள் நடந்துள்ளன. ஆனுல் புரட்சிகரமான வார்த்தைகளுக்குப் பின்னுல் உள்ள உள்ள அவற்றின் மகத்தான அர்த்தம் அவற்றை வெறுமே உச்சரிப்பதில் மட்டும் ஒருபோதும் வெளியாகிவிடுவதில்லை. புரட்சிகரமான வார்த்தைகளை யார் என்ன நோக்கில் உச்சரிக்கிறுர்கள் என்பதை உணர்ந்து கொண்டு வெறும் வாய்வீச்சு புரட்சியாளர்கட்கு செமத்தியான உதை கொடுத்து அரசியலில் இருந்து தூக்கி எறிய மக்கள் ஒருபோதும் தயக்கம் காட்டியது கிடையாது.

இன்று தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இந்த நிலையில் மக்கள் போராட்டம் என்ற வார்த்தை பரவலாக உச்சரிக்கப்பட்டு வருகிறது. இதனுல் மக்கள் மத்தியிலும் நமது தோழர்கள் மத்தியிலும் ஏற்படக்கூடிய குழப்பங்களை உத்தேசித்து அவற்றை சரியாக இனங்கண்டு கொள்ள முயல்வது அவசியமாகிறது.

ஒருவன் என்ன சொல்கிறுன் என்பதைக் கொண்டு அவனது நடவடிக்கைகளை தீர்மானித்துவிட முடியாது. அவனது நடைமுறை மூலமே இதனை நாம் அவதானிக்க முடியும். மக்கள் இயக்கம், மக்கள் போராட்டம் என்ற கோசங்களை மட்டும் வைத்துக் கொண்டு நாம் ஒருபோதும் யாரையும் நம்பிவிடக்கூடாது. புலாலுண்ணுமையின் மகத்துவம் பற்றி கிழப்புலி பிராமணனுக்கு உபதேசம் செய்த நாடோடிக் கதையை நாம் அறிவோம்.

எனவே, இந்த உச்சரிப்பாளர்களை சரியாக இனங்கண்டு கொள்ள நாம் தவறுவோமாயின், புலிக் கிரையான பிராமணனுக நாம் அவதியுற வேண்டிவரும் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே உண்மையான மக்கள் போராட்டம் என்பது என்ன, மக்களின் உண்மையான நண்பர்கள் யார். என்பதை அறிந்து கொள்வது எவ்வாறு என்று சற்று விரிவாக பார்ப்பது மிகவும் அவசியமானதாகும்.

## 2

உலக மக்கள் சனத் தொகையானது ஒவ்வொரு நாட்டிலும் இரு பெரும் முகாம்களுக்குள் பிரிக்கப்பட்டிருக்கிறதுடன் ஒடுக்குமுறையாளர்கள், ஒடுக்கப்படுவோர் என்ற அந்த இரு முகாம்களிற்குமிடையிலான போராட்டங்களே இன்று உலகெங்கும் வெடித்தெழுந்த வண்ணம் காணப்படுகின்றன. ஆளும் வர்க்கமானது, உற்பத்தியையும் உற்பத்தி சாதனங்களையும் தனது கையில் வைத்திருப்பதற்காகவும், அவற்றை பாதுகாப்பதற்காகவும் ஒடுக்குமுறையில் ஈடுபட்டு வருகின்றது. பிற்போக்கு உற்பத்தி முறைகள் நிலவும் சமுதாயத்தில் ஆளும் வர்க்கம் மிகவும் சிறியதாயும், பரந்துபட்ட மக்கள்மீது காட்டுமிராண்டித்தனமான ஒடுக்கு முறைகளையும் கட்டவிழ்த்துவிடுவதாயும் இருக்கும்.

முற்போக்கு உற்பத்தி முறை நிலவும் சமுதாயத்தில் பரந்துபட்ட மக்கள் கையில் உற்பத்திகளும், உற்பத்தி சக்திகளும் இருக்கும் இங்கு, ஒடுக்கப்படும் வர்க்கம் மிகவும் அற்பமானதாயும் இந்த ஒடுக்குமுறை நியாயமானதாகவும் இருக்கும்.

இன்று உலகின் பல பாகங்களிலும்பரந்துபட்ட மக்கள் பிற்போக்கு உற்பத்தி முறை நிலவும் சமுதாயங்களின்கீழ், பிற்போக்கு ஆளும் வர்க்கத்தினரால் மிலேச்சத்தனமான ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். இதன் காரணமாக மக்கள், இந்த ஒடுக்குமுறைக்கு எதிராகவும் சமுதாய வளர்ச்சியை அதன் போக்கில் வளர்த்துவிடுவதற்காகவும் இந்த பிற்போக்கு ஆளும் வர்க்கத்தினருக்கெதிராக போராடி வருகிறார்கள். பரந்துபட்ட மக்கள், ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கு ஒடுக்குமுறைகட்கு எதிராக அவர்களின் கைகளிலிருந்து அரச அதிகாரத்தை பறித்தெடுப்பதற்காக போராடும் புரட்சிப் போராட்டத்தையே நாம் முற்போக்கான மக்கள் போராட்டம் என்கிறோம். பரந்துபட்ட மக்கள் ஆட்சியதிகாரத்தை தமது கரங்களில் எடுத்துக்கொள்ளும்போது தான், சமுதாயமானது உலகப் பிற்போக்காளரின் சிறைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வளர்ந்து செல்ல முடியும்.

இத்தகைய மக்கள் போராட்டமானது இன்று உலகின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றது. ஒடுக்குமுறையாளர்கள் தமது இறுதிக்கட்டத்தில் நிற்பதை தெளிவாக புரிந்து கொண்டிருப்பதால், மக்களது போராட்டங்களை எல்லா வழிகளிலும் ஒடுக்குவதற்கான விதத்தில் இயங்கி வருகின்றனர். ஆயினும் வரலாற்றை தேக்கி நிறுத்திவிடுகின்ற, இந்த சிறு பிள்ளைத்தனமான பேதமை நிறைந்த விளையாட்டில் அவர்கள் நிச்சயம் தோல்வியே காண்பார்கள். வெல்ல முடியாத வரலாற்றுப் போக்கை தேக்கி நிறுத்துவதற்கான அவர்களது முயற்சிகளை, பரந்துபட்ட மக்கள் போராட்டங்கள் ஒவ்வொரு நாடாக தகர்த்தெறிந்து, சமுதாய மேம்பாட்டிற்கு உறுதி செய்து வருகின்றன.



ஆளும் வர்க்கமானது தன்னை தற்காத்துக் கொள்வதற்காக கட்டவிழ்த்து விடுகின்ற பிற்போக்கு ஒடுக்குமுறைகள் காரணமாக மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் இத் துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதற்கு அவர்கள் இந்த ஒடுக்கு முறைகட்கு எதிராக போராடியே ஆகவேண்டும். ஆளும் வர்க்கமானது, தனது சொந்த கலாச்சார, பண்பாட்டு துறைகளால் சமுதாயத்தை மாற்றியமைக்கின்ற பணியில் மக்களை ஈடுபடாவண்ணம் கட்டிப்போட்டிருக்கும். பொய்யான தத்துவங்களையும், கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் ஆளும் வர்க்கம் பிரச்சாரிப்பதன் மூலம் மக்களை மந்தமாக்கி வைத்திருக்கும். இதன் காரணமாக மக்கள் தமது ஒடுக்குமுறைக்கான காரணங்களை நேரடியாகவும் உடனடியாகவும் அறிந்துகொள்ள முடியாத நிலையை அது சிருஷ்டித்து இருக்கும். இந்த நிலையில் ஒடுக்குமுறையானது மிகவும் மோசமான அதன் உச்ச நிலையை அடையும்போது, மக்கள் தன்னெழுச்சியான போராட்டத்தில் தவிர்க்க முடியாது ஈடுபடுகிறார்கள். மக்கள் தமது ஒடுக்குமுறை சம்பந்தமாக சரியான கண்ணோட்ட மற்ற விதத்தில் ஆளும் வர்க்ககலாச்சாரப் பண்பாட்டுத் துறைகள் வேலை செய்வதன் காரணமாக ஆரம்பத்தில் அவர்கள் இந்த ஒடுக்குமுறை பற்றிய விளக்கமின்றியே நேரடியாக போராட்டத்தில் குதிக்கிறார்கள். இதனையே நாம் தன்னெழுச்சியான போராட்டம் என்கிறோம். இந்த தன்னெழுச்சியான போராட்டமோ அல்லது கிளர்ச்சியோ மக்களை உணர்ச்சி வழியிலான செயற்பாட்டில் ஈடுபடுத்தவைக்கின்றது. ஒடுக்குமுறைக்கெதிரான இந்த தன்னெழுச்சியான போராட்டமானது சரியான வழிமுறையற்று ஆழ்ந்த நோக்கற்று வெறும் எதிர்ப்பு நிலையிலேயே இருக்கும் என்பதால் இலகுவில் ஆளும் வர்க்கதினராலும் அரசு இயந்திரத்தாலும் வெற்றி கொள்ளப்பட்டுவிடும், அல்லது மழுங்கடிக்கப்பட்டுவிடும்.

இந்த தவிர்க்க முடியாத தன்னெழுச்சியான மக்கள் கிளர்ச்சியை மக்கள் போராட்ட

மாக வளர்ந்தெடுப்பதே, விழிப்படைந்த அரசியல் சிந்தனையாளர்களதும் போராளிகளதும் கடமையாகும். மக்கள் தன்னியல்பாக போராட்டத்தில்ஈடுபடுகின்ற நிலையில்மக்களை சரியான திசைவழியில் பயிற்சி வழிநடாத்தி போராட்டத்தை சரியான இலக்கு நோக்கி நடாத்தி, மக்களது வெற்றியை உறுதி செய்வதற்கு மக்கள் போராட்டமாக அதை வெற்றிகரகாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு முன்னணிப்படை அவசியமாகும். ஒரு முன்னணிப்படையின் வழிகாட்டலில் மக்களது போராட்டம் நடைபெறும்போதுதான் அது மக்கள் போராட்டம் என்ற முழுமையை பெறுகின்றது.

ஏனென்றால் ஒரு முன்னணிப்படையிருக்கும் போதுதான் மக்களை சரியாக வழி நடத்த முடியும் பெரும்பான்மை மக்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்த முடியும். அவர்களை சரியான பாதையில் போராட வைக்க முடியும். அல்லாவிடில் மக்களது போராட்ட உணர்வும் அவர்களது சக்தியும் வீணே அவமாகிப் போய்விடும்.

ஒடுக்கப்படும் மக்கள் மத்தியிலே காணப்படும் ஒப்பீட்டளவில் உற்சாகிகள் (போராட முன்வருவோர்) நடுநிலையாளர், பின் தங்கியோர் ஆகிய பிரிவினரை சரியாக இனங்கண்டு கொள்ளவும், சரியான ஒரு தத்துவத்தின் அடிப்படையில் போராட முன்வரும் முன்னேறிய பிரிவினரை (உற்சாகிகளை) அணி திரட்டி நடுநிலையாளரை வளர்ந்தெடுத்து பின்தங்கியோரை வென்றெடுத்து ஆதரவு சக்திகளாக திரட்டி போராட்டத்தை முன்னெடுக்க இம் முன்னணிப்படை யாலேயே முடியும். இம் முன்னணிப்படையாலேயே தறிகெட்டு இயங்கும் இயல்புள்ள மக்களது தன்னெழுச்சியான போராட்டத்தை அமைப்புக் குள்ளாக்கி, மக்கள் நலன் களுக்குரியதாகவும் வரலாற்றுப் போக்கை அதன் வழியில் செல்லவழிவகுப்பதற்கும் போராட்டமானது பிற்போக்காளரின் கையில் அகப்பட்டு சீரழியாது பாதுகாப்பதற்கும் முடியும்.

இப்படி ஒரு முன்னணிப்படையால் வழிகாட்டபடுப்போதே மக்கள் போராட்டமானது (மக்களால் ஒடுக்குமுறைகளை எதிர்த்து நடாத்தப்படும் போதும்) அதன் முற்போக்கு அம்சங்களை வெளிக்காட்டுகிறது. முன்னணிப் படையானது சரியான தத்துவார்த்த நோக்கில் அரசியல் தெளிவுடன் தனது பாதையை வகுத்துக்கொண்டு மக்களுடைய நலன்களுக்கமையவே தனது போராட்டத்தை வழி நடத்தாதபோது போராட்டம் பிற்போக்குதனமானதாக வழிகெட்டுப் போகிறது. எனவே போராட்டமானது அரசியலை ஆணையில் வைத்து ஒரு தெளிவுள்ள முன்னணிப் படை யொன்றின் வழி காட்டலின்கீழ் வரலாற்றை வளர்க்கும் நோக்குடன் மக்களால் நடாத்தப்படும்போது மககள் போராட்டம் எனும் முழுமையை பெறுகிறது. மாறாக ஒரு முன்னணிப் படையினுடைய பங்கை நிராகரித்த போராட்டமோ அல்லது முன்னணிப் படையினது தனித்த போராட்டமோ ஒருபோதும் மக்கள் போராட்டமல்ல. இவை இரண்டும் இருவகையான திசை விலகல்களே

## 4

மக்கள் போராட்ட முன்னணிப் படையானது (அரசியல் கட்சி) எங்கிருந்தோ வந்து மக்கள் முன் குதிப்பதல்ல. அல்லது அது எப்போதோ யாரோ உருவாக்கி நிலைத்து நிற்பதல்ல. மாறாக மக்களினது போராட்டங்களின்போது ஏற்படும் அனுபவங்களிலிருந்து மக்களாலே உருவாக்கப்படுவது. போராடுவதில் முன்னிற்கின்ற நாம் முன் சொன்ன வளர்ச்சியடைந்த முதலாவது பிரிவினரால் அவர்களது அநுபவம், சிந்தனை என்பவற்றினடிப்படையில் உருவாவது. மக்களில் விழிப்படைந்த இந்தக் குழுவினரால் மக்களை சரியான திசைவழியே அவர்களது போராட்டத்தை வென்றெடுக்கும் நோக்கில் வழிநடத்துவதற்காக உருவாக்கப்படுவது. அதுவே மக்கள் இயக்கமென அழைக்கப்படுகிறது. மக்கள் இயக்கமானது மக்கள் மத்தியில் உள்ள ஆளும் வர்க்க விரோதக் கருத்துக்களை சரியான முறையில் தொகுத்து பிரசசனைகளை விஞ்ஞான பூர்வமாக விளக்கி அவர்களை சரியான முறையில் அணிதிரட்டுவதற்கானமுயற்சியில் அது ஈடுபடுகிறது. அது மக்களை ஸ்தாபன ரீதியில் ஒன்று திரட்டி அமைப்பதற்குதவு

வதையும், மக்கள் மத்தியில் சரியான கருத்துக்களை நிலைநிறுத்துவதையும் பரந்துபட்ட மக்களின் சுதந்திரத்தை உறுதி செய்வதையும், முன்னணியில் நின்று போராடி வெற்றியை இறுதி வரை இட்டுச் செல்வதையும், வெற்றியின் பின் ஓர் மக்கள் நலன் பேணும் அரசை உருவாக்கி மக்கள் சர்வாதிகாரத்தை நிலை நாட்டுவதையும் தனது கடமையாகக் கொண்டிருக்கும்.

பிற்போக்கு ஆளும் வர்க்க ஒடுக்குமுறையாளர்களின் சர்வாதிகார அரசை நிர்மூலமாக்கி, மக்கள் அதிகார அரசை நிர்மூலமாக்கி மக்கள் சர்வாதிகார அரசை உருவாக்கும் பணியில் அது தீவிரமாக ஈடுபடும் மக்கள் ஆட்சியதிகாரத்தை தமது கையில் எடுக்கும் வரை எந்தவிதமான போராட்டங்களாலும் மக்கள் தமது சுபீட்சத்தை ஆளும் வர்க்கத்திடமிருந்து பெற்றுவிட முடியாது என்பதை உணர்த்தும் ஒரு ஆசானுகவும், மக்களது நலன்களை பேணி அவர்களது நலன்களிற்காகவே பாடுபடும் ஒரு தோழனுகவும் மக்களது பிரச்னைகளையும் அவர்களது அனுபவங்களையும் அறிந்து அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளும் ஓர் மாணவனுகவும் அது இயங்கும்.

இத்தகைய போராட்ட கடமைகளை அது சரிவர நிறைவேற்ற வேண்டுமாயின் அது சரியான சித்தாந்த ஆயுதத்தால் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். புரட்சிகர தத்துவம் இல்லாமல் ஓர் புரட்சிகர போராட்டம் அமைய முடியாது. தன்னை ஒரு புரட்சித் தத்துவத்தின் அடிப்படையில் போராட்டத்திற்கு தயார் படுத்திக்கொள்ளாத ஓர் இயக்கமோ அல்லது முன்னணிப் படையோ போராட்டத்தில் நிட்சயமான வெற்றியை அடைய முடியாது.

சரியான தத்துவம் என்னும்போது அது நடைமுறை அனுபவத்தில் இருந்தே உருவாகின்றது. நடைமுறை அனுபவங்கள் விஞ்ஞான பூர்வமான பரிசீலனைக்குள்ளாக்கப்பட்டு செழுமைப்படுத்தப்பட்டு தொடுக்கப்படும்போது அது உருவாகிறது. போராட்ட நடைமுறையை சரியாக நிகழ்த்தவே இந்த தத்துவம் மிகவும் அவசியமானதாகிறது.

சரியான தத்துவ ஆயுதத்தை கைக்கொண்டிருக்கும் போதுதான் இயக்கமானது விஞ்ஞான பூர்வமான சமூகக் கண்ணேட்டத்தைப் பெறுகின்றது, விஞ்ஞான பூர்வமான சமூகக் கண்ணேட்டமே போராட்ட வளர்ச்சியின், முற்போக்கையும் பிற்போக்கையும் இனங்கண்டுகொள்ள உதவுகிறது. விஞ்ஞான பூர்வமான கண்ணேட்டமானதுபிரச்சனைகளை அறிவு பூர்வமாக அலசி முரண்பாடுகளை சரிவர இனங்கண்டுகொள்ள உதவுகிறது. மக்களை வெற்றிகரமாக அணி திரட்டுவதில் இத்தகைய கண்ணேட்டம் மிகவும் முக்கியமானது.

போராட்ட வளர்ச்சியில் ஏற்படக்கூடிய சகல தத்துவார்த்த திசை விலகல்களுக்கும் எதிராக போரிடவும், மக்களை வென்றெடுப்பதில் முன்னேறவும் குறிப்பிட்ட சமூக பொருளாதார நிலைமைகளை ஆராய்வு செய்து தீர்க்கமான முடிவுகளை எடுக்கவும் ஒடுக்குமுறை சக்திகளை அழித்து போராட்டத்தை சரியான திசையில் வழிநடாத்தவும் ஓர் இயக்கம் சரியான தத்துவார்த்த நெறியினுல் ஆயுதபாணியாக்கம்பட்டிருந்தாலொழிய சாத்தியமில்லை.

எனவேதான் சரியான தத்துவமும், சரியான கண்ணாேட்டமும் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகின்றன. அப்போதுதான் முழு உலகில் இருந்தும் பிற்போக்கு சக்திகள் அறவே அழிக்கின்ற போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடவும், பரிபூரணமான மக்கள் ஜனநாயகத்தை உறுதி செய்யவும் வரலாற்றின் தடையற்ற வளர்ச்சிக்கு வழி திறந்துவிடவும் சாத்தியமாகும்,

புரட்சிகரமான தத்துவம் எப்படிப்பட்டதாக இருக்கும்? புரட்சிகரமான தத்துவம் போராட்டத்தில்இறுதிவரைபோராடக்கூடிய புரட்சிக்கரமான வர்க்கத்தின் தத்துவமாக இருக்க வேண்டும். அப்போதுதான் அத்தத்துவத்தால் போராட்டம் முழுமை வரை நிலை

பெற்று நிற்கமுடியும். புரட்சிகரமான வர்க்கம் என்று நாம் சொல்லும்போது குறிப்பிட்ட பிரச்சனையில்அடிமட்டத்தில்உள்ளமக்களையே குறிக்கும். தத்துவமானது மக்களது அனுபவம் வாழ்க்கை முறை என்பதில் இருந்து உருவாகிறது என்று பார்த்தோமல்லவா? எனவே மக்கள் மத்தியில் நிலவும் வேறொரு வர்க்கமும் தனது இருப்பு நிலைக்கேற்பவே தத்துவத்தை சிருஷ்டிக்கின்றது. எனவே ஆகலும் அடிமட்டமான ஒடுக்கப்படும் மக்கள் பிரிவினரின் தத்துவமே பரிபூரணமான மக்கள் விடுதலைக்கு உகந்ததாக இருக்கும். அதுவே உண்மையான புரட்சிகர தத்துவமாகவும் அமையும். அந்த புரட்சிகரமான தத்துவதின் வழிப்பட்ட போராட்டமே போராட்டத்தை ஊசலாட்டமின்றி இறுதிவரை இட்டு செல்வதாக அமையும்.

இனி இந்த தத்துவத்தை இயக்கத்தின் தத்துவமாகக் கொண்டு நடாத்த, அந்த நோக்கில் அது தனது நடைமுறையில் ஈடுபட அதற்கேற்ற வர்க்கத்தலைமை அவசியமானதாகும். குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கில் அதிகளவில் பாதிக்கப்படுவதும் அதிகளவில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறதுமான வர்க்கமே நலன் கருதும் புரட்சிகரமான வர்க்கமாகும். அந்த புரட்சிகர வர்க்கத்தின் தலைமையில் இந்த முன்னணிப் படையான இயக்கம் வழி நடாத்தப்பட வேண்டும்.

இத்தகைய ஒரு சரியான புரட்சிகரமான வர்க்கத் தலைமையில் இயங்கும்இயக்கம் தனது தனது புரட்சிகர தத்துவத்தை நடைமுறைப் படுத்தி போராட்டத்தை முன்னெடுக்கும் போது அதற்கென உருக்குப் போன்ற உறுதியும், கட்டுப்பாடும் நிறைந்த ஒரு ஸ்தாபனம் அவசியமாகிறது. சரியான ஸ்தாபனமில்லாத அமைப்புகள் அல்லது இயக்கம், போராட்டத்தில்நீண்டநாள் நிலைத்துநிற்கமுடியாது. உருக்குப் போன்ற ஸ்தாபனத்தை கட்டி யெழுப்புவதன் மூலமே, ஒரு முன்னணிப் படையானது பரவலாகவும் இறுக்கமாகவும் பலமுள்ளதாகவும் வளர முடியும். இதற்கு அமைப்புக்கு உள்ளும் புறமும், விமர்சனம், சுய விமர்சனம் தொடர்ந்து சகலவிதமான கருத்துக்களுக்கான போராட்டங்களுக்கு இடமளிப்பதும் அவசியமானதாகும். சரியான கருத்துப் போராட்டங்களுக்கான நோக்கில் நடாத்தப் படும் விமர்சன சுய விமர்சனங்களாலேயே ஒத்த கருத்தும், செயல்பாட்டுத் திறனும் கொண்ட உறுதி வாய்ந்த ஸ்தாபனம் பேணப்படும். தனது தவறுகளை திருத்திக் கொள்ள எந்தநேரமும் தயாராக இருப்பதன் மூலமே சரியான திசைவழியில் போராட்டம் நடைமுறைப்படுத்தப்படல் சாத்தியமாகும். பெரும்பான்மை மக்களை வென்றெடுக்கவும் இயக்கத்தை பரவலாக்கி வெற்றியை நிச்சயப்படுத்தவும் முடியும்.

## 5

ஓர் முன்னணிப் படையானது உறுதியான ஸ்தாபனமும் சரியான தத்துவார்த்த நெறியும் புரட்சிகரமான தலைமையும் கொண்டிருக்கும்போதே அது வெற்றிகரமாகப் போராட முடியும் என்று பார்த்தோம். ஆனால் இவ்வளவு இருந்தபோதும் முன்னணிப் படைக்கு இன்னும் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை. அந்த இரண்டும் இல்லாமல் அம் முன்னணிப் படையானது தன்னை ஒரு மக்கள் போராட்ட முன்னணிப்படையாக சொல்லிக்கொள்ள முடியாது. மக்கள் திரளை அல்லது வெகுஜனங்களை ஸ்தாபன முறையில் அணி திரட்டலும் மக்கள் புரட்சிகர இராணுவத்தை கட்டலுமே அவையிரண்டுமாகும்.

மக்கள்போராட்டத்தில்,போராட்டத்தை முற்றுமுழுதாக நடாத்துபவர்கள் மக்களே. போராட்டத்திற்காக மக்களை தயார் படுத்துவதும், அவர்களை தலைமையேற்று வழி நடாத்துவதுமே இயக்கத்தின் பணியாகின்றது. மக்களை வழிகாட்டல் என்றும் போது மக்களோடு சேர்ந்து போராடுவதன் மூலமே இதனை ஒரு இயக்கம் செய்ய முடியும். அதற்கு முதலில் எந்தவொரு இயக்கமும் பரந்த அளவில் மக்களை வென்றெடுக்க வேண்டும் மக்களை பரந்த அளவில் வென்றெடுப்பதில் தவறுமானல் இயக்கமானது தனது பலத்தை இழந்ததாகிவிடும்.

மக்கள் மத்தியிலான தொடர்ச்சியான பிரச்சார மூலமும் அவர்களின் நல் வாழ்க்கை காகவும் அவர்களது சாதாரண பிரச்சினைக் களுக்குமாக அவர்களோடு சேர்ந்து நின்று போராடுவதின் மூலமே மக்கள் மத்தியில் ஓர் இயக்கம் தனது செல்வாக்கைப் பெறமுடியும். மக்களோடு மக்களாய் அவர்களோடு ஒட்டி உறவாடி அவர்களின் நாளாந்தப் பிரச்சனை களுக்காகவும் போராடும்போதுதான் மக்கள் சக்திகளை வென்றெடுப்பது சாத்தியமாகிறது. இதற்குதான் ஒரு இயக்கத்திற்கு வெகுஜன அமைப்புகள் தேவைப்படுகின்றன.

வெகுஜன அமைப்புகள் மக்கள் மத்தியில் அவர்களோடு ஒட்டி உறவாடி அவர்களது பிரச்சினைகளுக்காகப் போராடுகின்றதுடன், தொடர்ச்சியான பிரச்சாரத்தையும் மேற் கொள்ளுகின்றன. மக்கள் மத்தியில் ஆளும் வர்க்கக்கலாச்சாரத்தால்ஏற்படுத்தப்பட்டுள்ள மாயைகளை உடைத்து, அவர்களின் பிரச்சனை களிற்கான காரணங்களை சரியாக விளங்கி அவர்களைப் போராடுவதற்கு தயார்படுத்தும் பகுதியை இந்த வெகுஜன இயக்கங்கள் செய் யும். மக்களோடு மக்களாக உறவாடபோது இந்த வெகுஜன அமைப்புகள் மக்களின் நம் பிக்கைக்கு பாத்திரவாளிகளாக முடியாது. வெகுஜன இயக்கங்கள் மக்கள் மத்தியில் தங்களை உண்மையான, மக்களின் நண்பர் கள் என்று விளக்கிக் கொள்வதற்காக, ஓய் வின்றி உழைக்கவேண்டும். மக்களது செல் வாக்கை பெறுவதுடன் பின்னர் அவர்களை போராட தயார் செய்வதுமாகிய ஸ்தாபன மாக்கல் பணியில் இந்த வெகுஜன அமைப் புகள் வேலை செய்ய வேண்டும்.

தூய்மையான தன்னலமற்ற தியாக ஊழியர்களைக் கொண்ட அமைப்பினுலேயே இது சாத்தியமாகும். மக்கள் மத்தியிலிருந்து உழைப்பால் வரும் தியாக உணர்வு மிக்க ஊழியர்களை தெரிவு செய்யவும். அவர்களை பயிற்றுவிப்பதன் மூலம் வெகுஜன வேலை களை துரிதப்படுத்தவும் இயக்கம் தவறக் கூடாது.

வெகுஜன அமைப்புகள் பரவலாக மக்கள் மத்தியில் வேர் பரப்பியுள்ளபோதே, மக்கள் இயக்கமாக ஒரு இயக்கம் (அரசியல் கட்சி யாக) பரிணமிக்கிறது. பரவலாக மக்கள் மத்தியில் வேர் பரப்பியுள்ள ஓர் இயக்கத்தின் வெகுஜன ஸ்தாபனங்கள் மக்களை சரியாக பயன்படுத்தி போராட்டத்திற்காக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். சமயம் வரும்போது மக்களை ஆயுதபாணியாக்கி போரை நடாத்தவல்ல விதத்தில் வெகுஜன அமைப்புகள் தயாராக இருக்குமாயின் அது ஒரு மக்கள் இயக்கமாகவும் அப்போராட்டம் ஒரு மக்கள் போராட்டமாகவும் முழுமை பெறுகின்றது.

மக்கள் இயக்கம் ஒன்று வெகுஜன ஸ்தா பனமொன்றை பரவலாகப் பெற்றிருந்தால் மட்டும் போதாது, அதற்கென சொந்த இராணுவமும் அவசியம். இராணுவம் இல் லாத இயக்கம் ஒன்றுமில்லாத இயக்கமாகும். மக்களுக்கு அவர்களில் இராணுவம் இல்லாத போது அவர்களால் எதையும் சாதிக்க முடியாது. எனவே மக்கள் இராணுவம் ஒன்றை பரவலாக அமைப்பதும் இயக்கத்தின் மிக முக்கிய கடமையாகும். ஆனுல் மக்கள் இராணுவமானது கூலிப்பட்டாள இராணுவம் போலல்லாது மக்கள் மத்தியில் மக்களோடு மக்களாய் வேலை செய்யவும் அவர்களது நல் வாழ்வில் பங்கு கொள்ளவும் அவர்களோடு உற்பத்திப் போரில் ஈடுபடவும் செய்யும். இந்த மக்கள் இராணுவமே மக்களின் போராட்டத்தை வெற்றிகரமாக முடித் தெடுக்க உதவியாக இருப்பதும் மக்கள் ஜன நாயக சர்வாதிகார அரசை நிலைநாட்டுவதும், அதை தொடர்ந்தும் பிற்போக்கு சதியாளர் களிடமிருந்து பாதுகாப்பதும் ஆகும்.

எனவே முழுதாக மக்கள் போராட்டம் என்பது ஓர் விடுதலை இயக்கத்தினர் அல்லது முன்னணிப் படையினர் தலைமையிலான பரந் துபட்ட மக்கள் போராட்டமேயாகும். இத் தகைய ஒரு போராட்டம் ஒருபோதும் வெல் லப்பட முடியாததும் நிச்சயமான வெற்றியை உறுதி செய்வதுமாகும்.

6

இதுவரையும் பொதுவாக மக்கள் போராட்டம் என்றால் என்ன? என்பது பற்றி பார்த்தோம். உண்மையில் மக்கள் தமது பிரச்சனைகளுக்காக போராடுகின்ற போராட்டமானது ஒரு மக்கள் போராட்டமாக இருப்பதுதான் இயல்பு. மாபெரும் ருஷ்யப் புரட்சிக்கும், சீனப் புரட்சிக்கும் பிந்திய காலங்களில் புதிதாக முளைந்தெழுந்த சில அரைவேக்காட்டு தத்துவங்கள், மக்கள் மத்தியில் பரவலாக வேலை செய்வதிலும் மக்களை அணி திரட்டுவதிலும், அலுப்பும், சலிப்பும் அடைந்ததன் காரணமாக மக்கள் யுத்தத்திற்கு புதிய வியாக்கியானங்களைக் கொடுத்துள்ளன. மக்களை அணி திரட்டி மக்கள் போராட்டத்தை வெற்றிகரமாகநடாத்திமுடிக்கபொறுமையும், விடாமுயற்சியும், தியாக உணர்வும், மக்கள் மீதான ஆழ்ந்த விசுவாசமும், நேசமும் அவசியமாகும். இவர்களை ஒருசேர உடையவர்களாலேயே திடமாக அந்த முயற்சியில் ஈடுபட முடியும். இத்தகைய முயற்சியில் சலிப்புறும் குட்டி முதலாளியப் போக்குள்ள சில அவசரக் குடுக்கைகள் வசதிகட்காக சிருஷ்டித்த தத்துவமே இன்று பரவலாக வளர்ந்து வருகின்றன. இவை காரணமாக நாம் மக்கள் யுத்தத்தை பற்றியும் அதன் நியாயமான தன்மை பற்றியும் திரும்ப திரும்ப அழுத்திக் கூற வேண்டி இருக்கிறது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களிடையே நிலவும் சிறு முதலாளிய உற்பத்தி முறை காரணமாக உருவாகும் தனி மனித வாதப்போக்கு இத்தகைய தத்துவங்களில் ஆர்வம் காட்ட தலைப்பட்டிருக்கிறதாலேயே மக்கள் போராட்டத்தை நாம் வலியுறுத்தி அழுத்தம் திருத்தமாக கூறவேண்டியுள்ளது. மக்கள் போராட்டம் தவிர்க்க முடியாததாகவும். வெல்லப்பட முடியாததாகவும் இருப்பதால் இவர்களும் இந்த பெயரிலேயே தமது தத்துவங்களுடன் போராட தொடங்குகின்றனர். இதை நாம் சரியாக இனம் கண்டு கொள்வது அவசியமாகும்.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் சிங்கள தரகு முதலாளிய அரசின் இன ஒடுக்குமுறையில் இருந்து எம்மை விடுவித்துக்கொள்கின்ற பிரச்சனையே முதன்மை பெறுகின்றது. இந்த ஒடுக்கு முறையை தகர்த்தெறிய நாம் ஒடுக்கப்படுகின்ற சகல மக்களையும் ஒன்றிணைத்து போராடுவது அவசியமானதாகும். தமிழ் மக்களின் சகல ஒடுக்கப்படும் தேசியப் பிரிவினரையும் எமது தலைமையின்கீழ் ஒன்றிணைத்து போராடுவதன்மூலம் ஒரு மக்கள் சனநாயக அரசை உருவாக்குவது எமது உடனடிக் கடமையாகும். எனவே நாம் அதற்கான திசைவழியில் எமது கடமைகளை வகுத்துக் கொள்ளவேண்டும்.

இந்த இனவாத ஜே. ஆர். அரசின் ஒடுக்குமுறையில் தமிழ் தொழிலாளர், விவசாயிகள், சிறு உடமையாளர்கள், நடுத்தர வகுப்பினர், தேசிய முதலாளிகள் ஆகிய சகல வகுப்பினரும், பாதிக்கப்படுகிறார்கள். தமிழ் தரகு முதலாளிகள்கூட பாதிக்கப்படுகிறார்கள். ஆயினும் அவர்களின் தரகு தன்மை காரணமாக நாம் அவர்களை நிட்சயமற்றவர்களாகவே கருதவேண்டும். போராட்டம் வெற்றி பெறும் கட்டம் வரை அவர்கள் எமக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கமாட்டார்கள் என்பது நிச்சயமில்லாத ஒன்றாகும். ஆனால் மற்றைய சகல தேசியப் பிரிவினரும் ஒன்றாக்கப்பட்ட நிலையில் இந்த இன ஒடுக்கு முறைக்கெதிராக போராட முன்வரக்கூடியவர்களே.

இவர்களில் இன ஒடுக்குமுறை காரணமாக அதிகமான பாதிப்புக்குள்ளாபவர்கள்' தேசிய முதலாளிகள், நடுத்தரவகுப்பினர், சிறு உடமையாளர்கள் ஆகிய பிரிவினரே. தமிழ் தொழிலாள விவசாயிகள் நேரடியான ஒடுக்குமுறையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறையவே பெற்றிருக்கின்றார்கள். இந்த நிலையில் இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக முதலில் குரல் கொடுப்பவர்கள் மேற்கூறிய மூன்று பிரிவினர்களுமே.

இந்த நிலையில் நாம், மேற் கூறிய மூன்று பிரிவினரின் குரலுடன் எம்மைச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்காக போராடுவது அவசியமானதா? ஆம் அவசிய

மானது தான். ஆனால் இந்த விடுதலைப் போராட்டத்திற்கு அவர்களது தலைமையில் அல்லாது, நாம் முன்பு சொல்லியபடி ஒரு புரட்சிகரமான தத்துவத்தின் அடிப்படையில் அடிபட்ட மக்களான தொழிலாள, விவசாயிகளின் தலைமையில் இப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் இந்தப் போராட்டமானது பரந்துபட்ட சகல மக்களினதும் ஜனநாயகத்திற்கான போராட்டமாக முடிவுபெற முடியும். ஒடுக்குமுறையின் நேரடிப்பாதிப்பு ஆழமாக இல்லாத நிலைகளில் புரட்சிகர தலைமை சக்திகளில் நாம் தொழிலாள விவசாய வர்க்கத்தினரை கருதலாமா என்ற கேள்வி எழுகின்றது. ஏனென்றால், அவர்கள் உடனடியாக இந்த தேசிய விடுதலை போராட்டத்தில் குதிக்குமளவுக்கு அவர்கள் பிரச்சனையாக இந்த இன ஒடுக்கல் பிரச்சனை கூர்மையடைந்துள்ளாதா? என்ற கேள்வி எழுகிறது.

உண்மையில் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அவர்களது தலைமையை வென்றெடுக்க முயற்சி செய்யவேண்டியது அவசியமாகும். ஆனால் தேசிய விடுதலைப் போராட்டமும் ஜனநாயக அரசை அமைத்தலும் எமது உடனடிக் கடமைகளே. அதன் பின்னனை நீண்டகால சோசலிச சமுதாயத்திற்கான எமது இறுதி இலக்கினை நாம் மறந்து விடக் கூடாது. எனவே சோசலிச இலக்கை நோக்கமாக கொண்டவர்கள் என்ற ரீதியிலேயே நாம் எமது புரட்சிகரமான தத்துவத்தை வைத்திருக்கின்றோம். அதாவது விடுதலைப் போராட்டத்தை சோசலிசத்தை அடைவதற்கான நோக்கிலமைந்த ஒரு தத்துவத்தின் ஒளியிலேயே நடாத்தப் போகின்றோம். எனவே, தொழிலாள விவசாயிகளை தலைமைச் சக்திகளாக வென்றெடுக்க நாம் முயற்சி செய்யவேண்டும். ஆனால், எம்மிடம் உள்ள புரட்சிகரமான தத்துவ அடிப்படையில் நாம் அமைக்கப் போகும் எமது முன்னணிப்படையானது, தொழிலாள விவசாயிகளின் வர்க்கதலைமை என்றும் போது அது தொழிலாள விவசாயிகளிடமிருந்து தெரிவு செய்யப்படும் நபர்களாலேயே கட்டாயமாக நிரப்பப்பட வேண்டும் என்ற ஒரு வரட்டுத்தனமான பார்வை உருவாவதற்கான வாய்ப்பு இங்கு உண்டு. இது அடிப்படையில் தவறானதாகும். இந்த தவற்றின் அடிப்படையிலேயே நாம் மேற்சொன்ன கேள்விகள் இரண்டும் எழுகின்றன.

சரியாகச் சொன்னால், புரட்சிகரமான தத்துவத்தின் வழிகாட்டலில், போராட்டத்தை முன்னெடுக்கின்ற முன்னணிப்படை கொண்டிருக்கும் வர்க்கப் பார்வையே, போராட்டத்தின் தலைமைச் சக்தி என்ன என்பதை தீர்மானிக்கிறது. எனவே எமது விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்திகள் தொழிலாள விவசாயிகளே. மற்றையோர் அவர்களின் நேச சக்திகளே.

இதன் மூலம் ஸ்தாபன ரீதியாக அணி திரட்டப்பட்டு சகல தேசியப் பிரிவினரையும், எமது அமைப்பின் தலைமையின்கீழ் போராட்டத்தில் ஈடுபடுத்தும்போது எம்மால் புரட்சிகரமான விடுதலையை வென்றெடுக்கவும் ஒரு மக்கள் ஜனநாயக அரசை உருவாக்கவும் முடியும்.

## 7

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் கடந்த காலங்களில் சிங்கள இனவாத அரசுகளின் ஒடுக்குமுறை காரணமாக மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. இவர்களது இந்த நிலையானது, இயல்பாகவே இவர்களிடம் அரசு மீதான அதிருப்தியையும் பேராட்ட உணர்வையும்உருவாக்கியுள்ளது. ஆயினும் இங்கிருந்த சந்தர்ப்பவாத சமரசத் தலைமைகளோ, மக்களை சரியான முறையில் அணி திரட்டி இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுத்தவில்லை. மாறாக மக்களுணர்வை பயன்படுத்திக்கொண்டு தாம் தமது சொந்த வர்க்க நலன்களிலேயே அக்கறை காட்டி வந்தன. ஒடுக்குமுறையானது மிகவும் மோசமானதாக மாறிக் கொண்டிருந்த போதும், இந்த முதலாளித்துவ தலைமைகள் போராட்ட உணர்வற்று வெறுமனே வாய்ச் சவடால்களில்

கவனம் செலுத்தித் திரிந்தன. இதனுல் வெறுப்படைந்த மக்கள் மத்தியிலிருந்து அரசியலில் பூரண வெறுப்பு கொண்ட இளைஞர்களின் தன்னெழுச்சியான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. தமிழ் அரசியல் தலைமைகள் மீது ஏற்பட்டிருந்த வெறுப்பானது இந்த இளைஞர்கள் மத்தியில் அரசியல் மீதே வெறுப்பையும் ஆயுதமேந்திய நடவடிக்கைகள்மீது அதித விருப்பையும் ஊட்டியது. அதனுல் ஏற்பட்ட இந்த தன்னெழுச்சியான நடவடிக்கைகள் வெறுப்புற்றிருந்த மக்கள் மத்தியில் ஒருவித ஆவலையும் நம்பிக்கையையும் தூண்டியதில் வியப்பில்லை. முதலாளித்துவ அரசியல் தலைமையின்கீழ் பழக்கப்பட்ட, மக்களுக்கு இந்த நடவடிக்கைகள் ஆர்வத்தைக் கொடுக்கவே செய்யும். இதன் காரணமாக இந்த தன்னெழுச்சிக் குழுக்கள் மக்கள் மத்தியில் ஒருவித அனுதாபத்தையும், செல்வாக்கையும் பெற்றுக்கொண்டன.

இந்தப் போக்கு இவர்களால் தொடர்ந்து நீடிக்கப்படாமல் போகவே தலைமறைவானதாக இவர்கள் இயங்கவேண்டி வந்தது. இந்த அனுபவம் இவர்களை குழுக்களாக ஒன்று சேர்த்து வைத்தது. ஆயினும் தன்னெழுச்சியான போக்கு மாறிவிடவில்லை. குழு நிலையில் இருந்து அவர்கள் தம்மை விடுதலை இயக்கங்களாக மாற்றிக்கொண்ட பின்புகூட இந்த தன்னெழுச்சியான போக்கு மாறிவிடவில்லை. குழுநிலையில் இருந்து இவர்கள் தம்மை விடுதலை இயக்கங்களாக மாற்றிக்கொண்ட பின்புகூட இந்த தன்னெழுச்சியான போக்கு அற்றுப்போய்விடவில்லை மக்கள் மத்தியில் பரவிவந்த மட்டுமீறிய புகழ்ச்சி உரைகள் இவர்களை ஹீரோக்களாக்கவே, இவர்களால் அவற்றை விட்டுவிட முடியாமல் போயிற்று. மட்டுமீறிய ஆயுதம் மீதான விருப்பும் வெறும் செயல் தீரங்களை காட்டி பிரமிக்க வைக்கின்ற ஆர்வமும் இவர்களை தொடர்ந்தும் உறுதியான நடவடிக்கைகளிலேயே ஈடுபட வைத்தன. இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் ஆதரவு பெருகவே. இவர்கள் வசதியாக இவற்றையே மக்கள் போராட்டம் என்றும் சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

அரசியல் மீதான வெறுப்பினுல் ஆயுதப் போராட்டம் என்று சொல்லிக்கொண்டு உதிரி நடவடிக்கைகளிலே இவர்கள் ஈடுபட்டது உண்மையில் இவர்களது செயலார்வம் காரணமாகவேயன்றி வேறல்ல. விடுதலைப் போராட்ட இலட்சியத்திற்காக ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபடுவதென்றுல் அதற்கு இவர்கள் அமைப்பு ரீதியாக அணி திரட்ட முயன்றிருக்க வேண்டும். ஆனுல் இவர்களோ, தமது நடவடிக்கைகளுக்காக ஆட்சேர்க்கும் பணியிலே ஈடுபட்டனர். உண்மையில் ஆயுதப் போராட்டம் என்பதற்குப் பதில்இவர்கள் செய்வதெல்லாம் எதிர்மாருனவையே. ஆயுதப் போராட்டம் என்பது அதன் சரியான அர்த்தத்தில் போராடுகின்ற மக்கள் தமது போராட்டத்தில் ஆயுதமேந்திப் போரடுதலையே, தமது இலட்சிய நோக்கமாகக் கொண்டு அதற்காக செயல்படுவது. ஆனுல் இவர்களோ தமது இலட்சியத்தினை வென்றெடுப்பதற்கான பணியில் முயற்சி எடுப்பதைவிட - அதாவது மக்களை போராட்டத்திற்குஅணி திரட்டுவதைவிட-இத்தகைய நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டனர்.

தமிழீழம் எமது இலட்சியம் என்று சொல்லிக்கொண்டு அதை வென்றெடுக்க தேவையான வழி வகைகளை செய்வதை விட்டுவிட்டு தமது மன விருப்பிற்கேற்ப காரியங்களைச் செய்வதிலேயே ஈடுபட்டனர். இது விடுதலைப் போராட்டத்திற்கான தயாரிப்புக்குப் பதிலாக, போராட்டத்தை உந்தி தள்ளுவதற்குப் பதிலாக, அதை சிக்கலுக்குள்ளாக்கவே பயன்பட்டது. மக்களை அணி திரட்டும் வேலையைக்கூட சரிவர செய்ய முடியாதபடி சிக்கலை உருவாக்கிற்று.

ஆனுல் இவர்களோ தமது நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஆதரவை பெற்றிருப்பதன் காரணமாக, தமது போராட்டத்தை மக்கள் போராட்டம் என மயங்கிநின்றனர். உண்மையில் மக்கள் அரசுக்கு விரோதமான மனப்பாங்குடன் இருப்பதால் அரசுக்கு எதிரான எந்த நடவடிக்கைகட்கும் மக்கள் மத்தியில் வரவேற்பு ஏற்படும். அது ஒரு இயக்கம் செய்தாலென்ன, தனிநபர் செய்தாலென்ன எல்லாம் ஒன்றுதான். ஆனுல் இந்த வரவேற்கும் ஆதரவு மட்டுமே மக்களை தயார்

நிலையில் இருக்கிறதாக சொல்வதற்கும் போதுமானதா? நிச்சயமாக இல்லை.

மக்கள் பிரச்சனை பற்றிய ஆழ்ந்த பார்வை, விஞ்ஞான ரீதியான சமூக நோக்கு என்பன இல்லாத பட்சத்தில் தவறான தத்துவங்களை தழுவிக் கொள்ளும் நிலைமை ஏற்படும். பொதுவாக சில இயக்கங்களிடையே மக்கள் தமது நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருப்பதால் தமது நடவடிக்கைகள் மக்கள் போராட்டமே என மயங்குகின்ற போக்கு இருப்பதற்கு காரணம் இந்த தவறான தத்துவத் தழுவலே. இவர்களிடையே நாம் சொன்ன குட்டி முதலாளிய தத்துவங்களின் பாதிப்பு இலகுவில் ஏற்பட்டுவிடுகிறது சேகுவராயிசம் இந்த இளைஞர்களை மிகவும் கவர்ந்திருக்கிறது. இவர்களிடையே சேகுவாராயிசமே மாக்சியத்தின்புதிய வடிவம் என்ற அபிப்பிராயம் நிலவுவதைக் காணலாம். உண்மையில் சேகுவராயிசம் அப்பட்டமான குட்டி முதலாளிய தத்துவம். இது அசல் மாக்சிய விரோதத் தத்துவம். மக்களே மக்கள் மட்டுமே வரலாற்றின் இயக்க சக்திகள். என்பதை அழுத்தம் திருத்தமாக மார்க்சியம் வரையறை செய்கிறது. ஆனால் சேகுவாராயிசமோ மக்களை இயக்க சக்திகளாகப் பார்க்கவில்லை. அவர்களை ஆதரவு சக்திகளாகவே நோக்குகின்றது. இதனை மக்கள் போராட்ட தத்துவமாக இவர்கள் கூறிவருகின்றனர். இதன் காரணமாகவே மக்கள் போராட்டமே தமது போரட்டமும் என்று அறிவிக்கிறார்கள். உதாரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் சொல்வதைக் கவனிப்போம். அவர்கள் தமது போராட்டம் பற்றி இப்படிக் கூறுகின்றனர். ''வெகுசன ஆதரவின்றி ஒருசிலர் மாத்திரம் ஆயுதம் ஏந்திப் போராடிக் கொண்டிருந்தால் மட்டும் அப்போராட்டம் தேசிய விடுதலைக்கோ அன்றி சோசலிசப் புரட்சிக்கோ வழிகோலப் போவதில்லை என்பது எமக்குத் தெரியாதது அல்ல. ஆயுதப் போராட்டமானது அணி திரண்ட மக்கள் சக்தியாக வெகுஜன ஆயுதக் கிளர்சியாக, விரிவடையும் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உணர்ந்து செயற்படுகிறோம். ஆகவே புரட்சிகர முறை தழுவிய எமது போராட்டமானது வெகுசன இயக்கத்திற்கு மாறாக, எவ்விதத்திலும் அமையவில்லை, ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைப்படுத்தி அதற்கு ஆதரவாக வெகுசனத்தை அணிதிரட்டவேண்டும் என்பதே விடுதலைப் புலி இயக்கத்தின் செயல் திட்டமாகும்'' (அரசபயங்கரவாதமும், ஆயுதப் போராட்டமும்)

அதாவது இவர்கள் ஆயுதப் போராட்டம் நடாத்துவதாக தாம் எடுத்துள்ள முடிவுக்கு சாதகமாக தமிழ் மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்கிறார்கள். தமது மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடாத்த ஆயுதமேந்து தற்கும், ஆயுதம் ஏந்துவதற்காக அவர்களை ஒன்றிணைத்தல் என்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் அவதானமாக கவனிக்கவேண்டும். அப்போது இவர்கள் சொல்கிற மக்கள் போராட்டத்தின் மகத்துவத்தை புரிந்து கொள்ள முடியும். இவர்களது முயற்சி, மக்களை அவர்களது பிரச்சனைக்காக போராடதயார் படுத்துவதல்ல, மாறாக அப்பிரச்சனைக்கான தமது முடிவுகட்காக, மக்களை ஆதரவாக அணி திரட்ட முயல்வதாகும். இது மக்கள் போராட்டமல்ல. உண்மையில் இவர்களிடம் காணப்படுவது சுத்த ராணுவக் கண்ணோட்டமே. அதாவது ஆயுதபலத்தை முதன்மையாக கருதி அதை செயல்முறையில் செய்ய ஆட்களை திரட்டுவதையே இவர்கள் நடைமுறையாக கொண்டுள்ளனர். இது அடிப்படையில் தமது மனவிருப்புகளுக்காக மக்களை இயக்கமுயலும் முயற்சியாகும். மக்கள் போராட்டத்திற்காக அவர்களை தயார்படுத்தும் வேலையல்ல இது. மக்களை மந்தைகளாகவும் தம்மை மேய்ப்பன்களாகவும் கருதுகிற குட்டி முதலாளிய சிந்தனைப் போக்கே இதுவாகும்.

இவர்கள் சாராம்சத்தில் அராஜகத் தன்மைகொண்ட தமது நடவடிக்கைகளையும் மக்கள் போராட்டம் என மயங்குகிறார்கள். தமிழ் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை சீர் குலைத்து விட்டதை பெருமைப்பட்டுக்

கொள்ளும் இவர்கள் ஆயுதப் போராட்டத்திற்கும் அராஜகத்திற்கும் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளவில்லை. உண்மையில் அராஜகம் என்பது சரியான வழிமுறையல்லாத செயல் நடவடிக்கையாகும். சிவில் நிர்வாகத்தை குலைப்பது என்பது அரசதிகாரத்தை உடைப்பதற்கென்றால் பதிலுக்கு இவர்கள் ஒரு அரசதிகாரத்தை உருவாக்க தயாராக இருக்க வேண்டும். மக்கள் தமது அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக அரசு நிர்வாகத்தை உடைத்தெறியப் போராடுவது முற்போக்கான மக்கள் போராட்டமாகும். ஆனால் எந்தவித தயாரிப்பும், அற்ற நிலையில் இருக்கும் அமைப்பையும் அதன் நிர்வாகத்தையும் அது எவ்வளவுதான் மோசமாக இருப்பினும் உடைத்தெறிவது அராஜக தன்மை கொண்டதாகும் தமது அதிகாரத்தை நிலை நாட்டும் நோக்கமற்று, இவர்கள் வெறும் செயல் வேட்கைக்காகவே செய்துவரும் இந்த ''ஆயுதப் போராட்ட'' நடவடிக்கைகள் நாட்டில்குழப்பமும்கொள்ளையும் அதிகரிக்கவும் அரசு புதிய புதிய அடக்கு முறைச் சட்டங்களை கொண்டுவரவும் புதுப் புதுப் பெயரில் இராணுவத்தை குவிக்கவுமே வழிவகுத்துள்ளன.

இவர்கள் மக்கள் போராட்டம் என்பது தமது நடவடிக்கைகட்டு சார்பாக மக்களை அணிதிரட்டுவதையே. மக்கள் வெறும் ஆதரவு சக்திகளாக இருப்பதல்ல மக்கள் போராட்டம். மக்களே இலக்கு சக்திகளாகி போரிடுவதே மக்கள் போராட்டமாகும். மக்கள் தமது விடுதலைப் போராட்டத்திற்காக கொரில்லா நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பதற்கும் ஒரு கொரில்லா குழு தனது செயல்களுக்கு மக்கள் ஆதரவை திரட்டுவதற்கும் வித்தியாசம் உண்டு. முதலாவது மக்கள் போராட்டம் மற்றது சேகுவேராயிசம் என்பதே அவ்வித்தியாசமாகும். இந்த சேகுவேராயிசம் மக்கள் போராட்டதினின்றும் வேறுபட்டது., நீண்டகால யுத்தத்தில் சலிப்புறுவதும், உடனடி விளைவை நம்பி எதிர்பார்ப்பதும், குருட்டு அதிஷ்டத்தில் மட்டுமே வெற்றியைப் பெறக்கூடியது- அதாவது நிட்சயமற்றது. எனவே இது மிகவும் அவசரமாக வெறுத் தொதுக்கப்படவேண்டியதும் எமது பிரச்சனைக்கும் அதன் பௌதீக குணும்சங்கட்கும் எந்த விதத்திலும் பொருந்திவராத இது உடனடியாக நிராகரிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

தங்களை ரெலோயிஸ்டுகள் என அறிமுகப்படுத்தும் தமிழீழ விடுதலை இயக்கதினர் (TELO) சொல்வதைக் கவனிப்போம்.

.......எனவே தேசிய விடுதலைக்கு மக்கள் ஆதரவுடன் அமைப்பு ரீதியாக வளர்ச்சியடைந்து வரும் எமது இயக்கத்தின் திட்டமிட்ட விரிவாக்கப்பட்ட ஆயுதப் போராட்டமே யதார்த்தமானதாகும் (—நாம் வன்முறைமீது காதல் கொண்ட மனநோயாளர்கள் அல்ல—பிரசுரம்)

இவர்களும் அதையே வேறுவார்த்தைகளில் சொல்கிறார்கள். மக்களின் ஆதரவுடன் தமது இயக்கம் வளர்த்து வருவதாக இவர்கள் சொல்கிறார்களேயன்றி மக்கள் இயக்கமாக தாம் வளர்வதாக அல்ல இவர்கள் சொல்வது. அதாவது, மக்களது ஆதரவு பெற்ற தமது இயக்கத்தின் போராட்டமேமக்கள் போராட்டம் என்று சொல்கிறார்கள். உண்மை அதுவல்ல, மக்கள் இயக்கம் என்பது போராட்டத்தின் முன்னணிப்படை மட்டுமேயாகும் என்று முன்பே நாம் பார்த்திருக்கிறோம். சிறிலங்கா அரசின் ஒடுக்குமுறை காரணமாக எந்தொரு குழுவோ தனிமனிதனோ கூட மக்களின் ஆதரவை பெற்றுவிட முடியும். அதற்காகவே அவர்கள் நடவடிக்கைகள் மக்கள் போராட்டம் என்ற அந்தஸ்தை பெற்றுவிட முடியாது. அத்துடன் மக்கள் போராட்டம் யார் தலைமையில் என்பது பற்றியோ, மக்களை அணிதிரட்டுவது எப்படி என்பது பற்றியோ இவர்கள் சொல்வதில்லை. காரணம் இவர்கள் மக்கள் ஆதரவு பெற்ற போராட்டங்களையே மக்கள் போராட்டம் என மயங்குவதுதான்.

இன்னும் பார்க்கலாம். தமிழீழ விடுதலைக் கழகத்தினர் (PLOT) என்ன சொல்கிறார்கள் என்று கவனிப்போம். மக்கள் போராட்டம்

பற்றி இவர்கள் கொண்டிருக்கும் கருத்தும் கையாளும் போக்கும் தவறானதாகும். போராட்டத்திற்கு மக்களை சேர்ப்பது என்ற நிலையில், எந்தவிதமான வித்தியாசமுமின்றி ஆட்களைச் சேர்ப்பதே மக்கள் இயக்கம் என்கிறார்கள். இவர்களது இந்த ஆட் சேர்ப்பிலுள்ள அசுரத்தனமானது சமூக விரோதிகளையும் சேர்த்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த கும்பலான ஆட்சேர்ப்பில் உருவாவது இயக்கமல்ல, வெறும் கட்டுக்கோப்பற்ற கும்பலே. ஒரு கும்பலால் அது எவ்வளவு தான் பெரியதாக இருந்தாலும்கூட, ஆக்கபூர்வமான ஒரு காரியத்தை சாதிக்க முடியாது. அதுவும், உறுதியான ஒரு நீண்டகால போராட்டத்தில் இந்தகும்பலால் உறுதியாக நிலைத்துநிற்க முடியாது. உருக்குப் போல உறுதியான போராளிகளை உருவாக்கி இரும்புக் கோட்டையாக ஒரு அமைப்பை கட்டுவதற்குபதிலாக இப்படி மனம் போன படி ஆட்களை சேர்ப்பது செயல்முறையில் இலகுவானதாயினும் மிகவும் ஆபத்தானதும் விரைவில் உருக்குலைந்து போய்விடுவதுமாகும். இவர்களுக்கு பரவலான தொடர்பும் ஆதரவும் மக்கள் மத்தியில் இருப்பினும் அவை சரியாக நெறிப்படுத்த படாவிடின் பயனற்றுப் போய்விடும். இராணுவத்திற்கு என்று சொல்லி அவர்கள் இப்படி அள்ளு கொள்ளையாக ஆட்சேர்ப்பதை இவர்கள் போராட்டத்திற்கான அணிதிரட்டல் என்று சொல்லி கொள்ளலாமாயினும், அது உண்மையல்ல என்பது அவர்கட்டு புரியவில்லை.

மக்கள் போராட்டம்பற்றி இவர்கள் சொல்வதற்கும் இவர்கள் செயல் முறைக்கும் வேறுபாடுண்டு இவர்கள் பாட்டாளி தலைமையிலான மக்கள் போராட்டமே தமது போராட்டம் என்றும் சோசலிச தமிழீழமே தமது இலட்சியம் என்றும் இவர்கள் கூறி வருகிறபோதும், செயல் முறை முரண்பாடு காணப்படுகிறது. போராட்டத்திற்கென சரியான தயாரிப்பில் ஈடுபடாதவரையிலும் சிறுபிள்ளைத்தனமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று இவர்கள் பெரிதாக கூறிக் கொண்டபோதும், நடைமுறையில் இவர்கள் அதை கடைப்பிடிப்பதில்லை. 13 இராணுவவீரர் தாக்குதலை விமர்சனம் செய்து, தாக்குதல் தொடுக்கும் இவர்கள் அது ஒரு அரைவேட்டுத்தனமான நிகழ்ச்சி என ஆழ்ந்த பார்வையுடையவர்கள் போல கூறிக் கொள்ளும் இவர்கள், தாம் வவுனியால் வான்படையைத் தாக்கவோ, [redacted] பின் நிற்பதில்லை. ஊருக்கு உபதேசம் செய்யவோ பின்நிற்பதில்லை.

இவர்களது உத்தியோக பூர்வமான இதழ் என்று சொல்லிக் கொண்டு வெளிவந்த புதியபாதை (புதிய இதழில் இவர்கள் ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு எழுதுகிறார்கள்.

இன்றும் பல இயக்கங்களைப் பொறுத்தவரை அரசியல் என்பதும் அவதூறு பொழிவதும், கிசு கிசு பேசுவதும் தன்அளவிற்கு குறுகிவிட்ட நிலையில், கடந்தகால விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை ஒரு ஆரோக்கியமான கண்ணோட்டத்துடன் இந்தச் சாட்டில் சில பிரச்சனைகளை ஆராய முற்பட்டுள்ளோம்.

சம்பந்தப் பட்டவர்கள் இதன் பின்னாவது சுயவிமர்சனம் செய்து திருத்திக் கொள்வார்களென்று எதிர்பார்க்கின்றோம்

மாறாக இதற்கு கடந்தகால பாணியிலே விடையளிக்க முற்பட்டால்,

## நாம் வெறும்கை வேதாந்திகளல்ல!

இது எதைக் காட்டுகிறது? இவர்களது மமதைச் செருக்கும் ஆணவமும் நிரம்பிய இந்தக்குரல் சக இயக்கங்கள் மீது ஒரு எச்சரிக்கையாக வெளிப் பட்டிருக்கிறது மற்றைய இயக்கங்கள் மீதுசுய விமர்சனத்தை எதிர்பார்க்கும் இவர்கள் தமது கடந்தகால தவறுகளை மூடிமறைக்க பிறரை விமர்சித்துக்கொண்டும் இவர்களுக்கு மற்றவர்கள் தமது விமர்சனத்தில் திருத்த

வேண்டும் என்று கோரவும் என்ன தார்மீக உரிமை இருக்கின்றது?

மற்ற வர்களை விமர்சனம் செய்யும் அதே வேளை தம்மையும் சுய விமர்சனம் செய்து கொள்ளல் வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இவர்கள் அரசியல் ரீதியான பூரண தெளிவுடன் எந்த வித கருத்தையும் மக்கள் முன் வைக்கவில்லை சோஷலிச தமிழீழம் என்று ஒரு இடத்திலும் பாட்டாளி வர்க்க தலைமை எனவும் மக்கள் ஜனநாயக குடியரசு என்று இன்னோர் இடத்திலும் முரண்பட்ட விதத்தில் தெளிவற்ற கருத்துகளை முன் வைத்துள்ளனர்.

ஆக இம் மூன்று பிரிவினரும் தமது சுத்த இராணுவக் கண்ணோட்டம் அல்லது அரசியல் தெளிவற்ற பார்வை காரணமாகமக்கள் யுத்தம் என்ற போர்வையில்தவறான நடைமுறையையேகொண்டுள்ளனர் மக்கள்யுத்தப்பாதை என்ற பதத்தை உச்சரித்துக் கொண்டே அதற்கு முரணான விதத்தில் இவர்கள் செயல்பட்டு வருகின்றனர். அடிப்படையில் சரியான புரட்சி கரத்தத்துவம் ஒன்றினையும் விஞ்ஞான பூர்வமான உலகக்கண்ணோட்டத்தையும் கொண்டிராத எந்தவொரு இயக்கமும், ஸ்தாபனமும் தவறான பாதைக்கு செல்வது தவிர்க்க முடியாததொன்றே.

அடுத்து தமிழ் மக்களின் விடுதலையை அல்லது தமிழீழத்தின் விடுதலையை வென்றெடுக்க மக்கள் போராட்ட பாதையைக் கூறுவது EROS உம் EPRLFஉம் ஆகும். இந்த EROSகாரர்கள் அசல் கற்பனா வாதிகளாக பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் தேசிய இனப் போராட்டத் திற்கும் இடையிலுள்ள அடிப்படை குணம்ச வேறுபாடுகளை கருத்திலெக்காது வெறும் வறட்டு சித்தாந்த வாதிகளாக செயல்பட்டு வருகின்றனர் இதன் காரணமாக மக்கள் மத்தியிலான வேலை செய்வதை விடவும் புரட்சி இறக்குமதி செய்யப்படலாம் என்பதில் அதிக நாட்டத்துடன் செயல் பட்டுவருகின்றனர். [redacted]

E.P.R.L.F ஐ பொறுத்தவரையில் இவர்களிடம் EROS இன் பாதிப்பு பூரணமாக இன்னும் போய்விடவில்லை. ஒரு மக்கள் ஜனநாயக விடுதலையை வென்றெடுக்க கையில் முன்னணிப் படையின் தந்தி ரோபாய நடவடிக்கையில் அதிகம் அக்கறை காட்டாது மட்டுமீறிய இடது சாரி வாசகங்களை உதிர்க்கும்போக்கும் பாட்டளிவர்க்க தலைமையெனக் கூறிக்கொண்டு மலையகம் நோக்கி ஓடும் போக்கும் இவர்களிடம் காணப்படுகின்றது அடிப்படையில் சுத்த இராணுவ வாதிகளாக இவர்கள் இல்லாதிருப்பதே இவர்களது சிறப்பம்சமாகும். மக்கள் மத்தியிலான வேலையை இவர்கள் முதன்மைப் படுத்துகின்றார்கள் என்பதால் இவர்கள் சரியான மார்க்கத்தை நோக்கி திரும்பக்கூடிய வாய்ப்புகள் உண்டு குறிப்பாக தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிசரியான கண்ணோட்டம் ஒன்றை இவர்கள் பெற்றுக் கொள்ளுமிடத்து இவர்கள் ஒரு சரியான பயனுள்ள அமைப்பாக வளர்ந்து கொள்ள வாய்ப்புண்டு. வெகுஜன ஸ்தாபனங்களை கட்டுவதிலும் மக்களை அரசியல் மயப்படுத்துகின்ற பணியிலும் அமைதியும் நிதானமும் கடைப் பிடிக்கும் தன்மை இவர்களிடம் இல்லாத ஒரு குறைபாடாகும்

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாட்டளி வர்க்கத் தலைமை வலியுறுத்தப் படுவது சரியானதே. ஆனால் அதற்காக வெறும் வரட்டுத்தனமாக பாட்டாளிகள் என்பதற்காக மலையக மக்களை ஒன்றிணைக்க முயல்வது நியாயமானதல்ல. நாம் முன்பு சொன்னதுபோல புரட்சிகரமான தத்துவம் தலைமை வகிக்கும் போது இத்தகைய தத்துவத்திற் கேற்ற வர்கத்து மக்களையே தேடிப் பிடிக்க வேண்டுமென முயல்வது ஒருவகையில் குழப்பமான சிந்தனைப் போக்கே புரட்சிகரதத்துவ வழிகாட்டலின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பரந்து பட்ட மக்கள் அணியொன்றை கட்டுதல் என்பது முன்னுள்ள பிரதான பணியென்பதை விளங்கிக் கொண்டு செயல்படுத்தல் வேண்டும்

இறுதியாக நமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பிரதான எதிரியான ஸ்ரீலங்கா தரகு முதலாளியத்தினதும் அதன் அரசினதும் சகலவிதமான ஒடுக்கு முறைகளையும் தகர்த்தெறிய தவிர்க்க முடியாத ஒரு யொரு யுத்த தந்திரம் மக்களை யுத்தமே புரட்சிகரமான தத்துவத்தின் அதாவது சாதாரண மக்களின் தத்துவத்தின் தலைமையில் சகல ஒடுக்கப்படும் மக்களையும் அணி திரட்டுவதுதான் மக்கள் யுத்தத்திற்கான முதல் வேலையாகும்

சகல பரந்துபட்ட தமிழீழ தேசிய பிரிவினரதும் விடுதலையை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்பட ஒரு இறுக்கமான ஸ்தாபனத்தை கட்டுவதே இன்றுள்ள முதன்மையான பணியாகும்.

# அரசியற் குறிப்புகள்

## 1. பேச்சு வார்த்தை என்னும் புஸ்வாணம்

சர்வகட்சி மாநாட்டுப் பேச்சு வார்த்தைகள் இன்னும் முடியவில்லை என்பது உண்மைதான். பண்டா செல்வா ஒப்பந்தத்திலிருந்து நீண்டு கொண்டிருக்கும் இந்தப் பேச்சு வார்த்தை எப்போது முடியும் என்று தெரியா விட்டாலும் முடிவு எப்படி இருக்கும் என்பதனை ஊகிப்பது ஒன்றும் அவ்வளவு சிரமமான காரியம் அல்ல. தமிழீழ தேசிய விடுதலை என்பது வரலாற்று ரீதியான தவிர்க்க முடியாத ஒரு அம்சமாக இருப்பதை விளங்கிக் கொள்ளாத பிற்போக்கு சக்திகளும் சமரச விரும்பிகளும் இந்தப் பேச்சு வார்த்தையில் ஏதாவது கிடைத்துவிடலாம் என்று பிரமை கொள்வது பற்றி யாரும் அக்கறை கொள்ளத் தேவையில்லை. ஆனல் தமிழீழ மக்கள் தமது விடுதலை என்றும் பேச்சு வார்த்தைகளால் கிடைத்துவிடப் போவதில்லை என்பதை ஓரளவு தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் இலங்கை, இந்திய அரசுகள் சமரசத் தீர்வு என்ற போர்வையில் பாவ்லா காட்டுகின்றன. எமது கூட்டணியோ மதில்மேல் பூனைபோல் இருந்து கொண்டு தடுமாறுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் இரண்டு அரசுகளும் தத்தமது நலன்களுக்காக நடாத்தும் இந்தச் சதுரங்க விளையாட்டில் தமிழர்கள் இனியும் பகடைக் காய்களாக உருட்டப்படுவதை அனுமதிக்க முடியாது. தமிழர்கள் தமது சொந்த பலத்தில் உறுதியான போராட்டம் ஒன்றை முன்னெடுப்பது தவிர்க்கமுடியாதஒருவிடயம்'

ஜே.ஆர் நேரடியாகவே மாவட்டசபைகளுக்கு அப்பால் போகமுடியாது என அறிவித்து விட்டான். கூட்டணியும் தமிழ்க் காங்கிரசும் இந்த விடயத்தைக் கேட்டும் ''இன்னமும் நம்பிக்கை கொண்டிருக்கின்றன முன்கூட்டியே செய்யுப்பட்ட ஒரு முடிவுக்காக பேச்சு வார்த்தை நடாத்துவதனை தமிழ் அரசியல் வரலாறு மீண்டும் ஒருமுறை தனது பக்கங்களில் நிரப்பிக் கொண்டுள்ளது என்பதைத் தவிர வேறு எந்த விஷய முக்கியத்துவமும் இதற்குக் கிடையாது. பேச்சு வார்த்தைக்குத் தமிழரை அழைத்துக் கொண்டே படைதிரட்டல் பற்றிய மிரட்டல்களும் செயல்களும் பரவலாக நடைபெற்றுக் கொண்டுவருகின்றன. யு.என்.பி அரசும்அதன் இனவெறியர்களும் சர்வ தேசியப் பிற்போக்கு சக்திகளுடன் அணிசேர்ந்து கொண்டு தமிழீழத்தை நசுக்க எடுத்துவரும் நடவடிக்கைகள் இன்று அம்பலமாகி வருகின்றன இதைச் சரிவர இனம் கண்டு இந்தப் பேச்சு வார்த்தை முகத்திரையைக் கிழித்தெறிந்து விட்டு தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள மக்கள் தம்மைத் தயாராக்கிக் கொள்கிறார்கள் என்பதை ஆட்சியாளர்களால் ஜீரணிக்க முடியாதுள்ளது. இந்த உந்துதலே பரந்துபட்ட மக்களை அழித்தொழித்துப் பீதிக்குள்ளாக்கும் விதத்தில் அரசைச் செயல்பட வைத்துள்ளது. ஆட்சியாளர்கள் ஒன்றைமட்டும் மறந்துள்ளார்கள். துப்பாக்கிக் குண்டுகளும் இனவெறிக் காடைத்தனங்களும் புடமிட்ட சுதந்திரப் போராட்டத்தின் முன்னல் வரலாற்றில் ஒரு போதும் வெற்றி பெற்றதில்லை என்பதை ஆட்சியாளர்களும் அவர்களதுகாடையர்களும் நன்கு உணர வேண்டும். இந்த ஆட்சியாளர்களும் அவர்களது காடைக்கும்பலும் நாளையே வரலாற்றில் அற்பப் புழுக்களாக தூக்கியெறியப்படப்போவதும், தமிழீழ விடுதலை

வெற்றி பெறப்போவதும் ஒரு தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகும். அண்மையில் யாழ் நகரில் மக்கள் தன்னெழுச்சியான தாக்கு தலில் குதித்தது இதனை நன்கு உறுதிப் படுத்துவதாகும்.

விகாரைத் தாக்குதல், சிங்கள மகா வித்தியாலயத் தாக்குதல் போன்ற சில தவறான நடவடிக்கைகள் இடம் பெற்றன. அதாவது நன்கு நெறிப்படுத்தப்படாத இந்த மக்களின் எழுச்சி எதை வலியுறுத்துகின்றது? மக்களை நன்கு பிணைத்துக் கொண்ட ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட ஸ்தாபனத்தின் தேவையையே வலியுறுத்துகின்றது.

## 2. ஆதரவே போதும்

பிற்போக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி யின் ஏமாற்று அரசியல் வழிகாட்டலினால் வழிநடத்தப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு நோய்போல அந்நிய ஆதரவு எதிர்பார்ப்பு ஓரளவு பரவிக் காணப்படுகின்றது. ஆயினும் தமது உள்ளூர் அரசியல் இலாபங்களுக்காக தமிழ் மக்கள்மீது தாம் ஏதோ விஷேச காதல் கொண்டுவிட்டவர்கள் போல நடந்து கொள்ளும் சில அரசியல் வாதிகளின் எழுந்த மான நடவடிக்கைகளை ஒரு போதும் அனு மதிக்கமுடியாது. இலங்கையில் தமிழ்மக்கள் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள் என்பதற் காக இந்திய ராணுவத்தை அனுப்பும்படி கண்ணை மூடிக்கொண்டு கோரும் போக்கு மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது ஆகும். அண்மையில் தி.மு.க தலைவர் கருணாநிதி இலங்கைக்கு இராணுவத்தை அனுப்ப இந்திய அரசு தவறும் பட்சத்தில் தானும் தனிநாடு கேட்கப் போவதாகப் பேசியிருக்கிறார். தமிழீழ தேசிய விடுதலையின் அவசி யத்தையோ, அதற்கான போராட் டத்தையோ எவ்வளவு அற்பமாக நினைத்தி ருந்தால் இவரால் இப்படி பேசியிருக்கமுடியும்? தனது மனவிருப்பத்திற்காக தனிநாடு கேட்பது போன்ற ஒரு விஷயமாகத்தான் தமிழீழ மக்களது பிரச்சினை இருப்பதாக நினைத்துக்கொண்டு இப்படிப் பட்ட கொச்சைத் தனமான கருத்துக்க வெளி யிடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

தமிழீழ மக்கள் தமது பிரச்சனைகளுக்காக தமது தேசிய விடுதலையை வென்றெடுப் பதற்காக சுதந்திரமும் தன்னுதிக்கமும் கொண்ட தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு ஒன்றை நிறுவுவதற்காகவே போராடி வருகின்றார்களேயன்றி இந்திய இராணுவத்தை அழைத்து தமிழீழத்தையும் ஏன் சில வேளைகளில் முழு இலங்கையையுமே இந்தியாவின் விஸ்தரிப்புவாத நடவடிக்கை கட்கு இரையாக்குவதற்காக அல்ல. தமிழீழ தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் இந்திய அரசினது தார்மீக உதவிகளை தமிழீழ மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்ற போதும் இந்திய அரசின் இராணுவத்தை அனுப்பி ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதை அவர்கள் நிச்சயமாக எதிர் பார்க்கவில்லை.

சுயபலத்திலும் சுதந்திரத்திலும் நம்பிக்கை அற்ற வெற்றுப் பதவி ஆசைக் காரர்கள் சிலவேளை இந்திய ஆக்கிரமிப்பைக் கூட ஏற்றுக்கொள்ளலாம். எமது மக்கள் மீதும் அவர்கள் பலம்மீதும் நம்பிக்கை அற்ற, நீண்ட காலநோக்கற்ற சில தான்தோன் றிகள் ஒரு ஆக்கிரமிப்பை வரவேற்கவோ அல்லது இந்திய இராணுவத்தை இங்கு அழைக்கவோ தயாராகலாம். ஆனால் தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசான தமது சொந்த அரசை உருவாக்கப் போராடு பவர்கள் என்ற வகையில் இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்திய அரசின் மேலாதிக்கத்திற்கு அல்லது வேறெந்த அரசின் மேலாதிக்கத்திற்கு கீழ்ப் பட்டோ தமிழீழ அரசு உருவாகும் நிலையை ஏற்படுத்தக்கூடாது என்பதில் தமிழீழ மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

எமக்கு ஆதரவு போதும், ஆக்கிரமிப்பு வேண்டாம்.

## 3. யாழ் சாம்பவத்தின் படிப்பினைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ் ரெயில் நிலையத்தருகில் இராணுவவாகனம் குண்டு வைத்துத் தாக்கப் பட்டதைத் தொடர்ந்து யாழ் நகர் மீண்டும் எரியூட்டப் பட்டது. இராணுவக் காடையரின் அட்ட காசம் ஒரு வாரத்திற்கு மேலாக அல்லோல கல்லோலப் பட்டது. மனிதர்களின் மரண ஓலங்களும், குண்டு வெடிப்புச் சத்தங்களும், இயந்திரத்துப்பாக்கிகளின் கடகடசத்தமுமாக யாழ்நகர் ஒரு யுத்தபூமியாக மாறிவிட்டிருந்தது. தெரு வோரங்களில் மனித உடல்கள் போட்டு எரியூட்டப் பட்டன. வாகனங்கள் தீயிடப்பட்டன. ராணுவ வாகனங்கள் துப்பாக்கிச் சன்னங்களைத் தீயாக உமிழ்ந்தபடி யாழ்நகர்வீதிகளில் ஓடித் திரிந்தன. அச்சமும் பீதியும் நிறைந்த நாட்களாக அவை கழிந்தன.

இந்தியா"டுடே"யில் வெளிவந்த கட்டுரையை அடுத்து தமிழ்ப் பகுதி வெகு வேகமாகப் பலப்படுத்தப்பட்டது. நவீன ஆயுதங்களுடன் தெருவெல்லாம் இராணுவம் அலைந்தது. கவச வாகனங்களும், நீட்டிய படி எந்நேரமும் தீயுமிழத் தயாரான துப்பாக்கிகளுடன் ஓடித்திரியும் ட்றக் வண்டிகளும் ஒரு நேரடி யுத்தத்திற்கு இராணுவம் தயாராகிவிட்டதை பறைசாற்றிக் கொண்டிருந்தன. இரத்த ருசிகண்ட வெறிநாய்களாக சுன்னாகத் தாக்குதலின்பின் ராணுவம் ஓடித் திரிந்தது. புதிது புதிதாக இராணுவப் பிரிவுகள் வெவ்வேறு பெயர்களில் வடக்கு நோக்கிக் குவிக்கப் பட்டிருந்தன.

பாராளுமன்றத்திலும், வானொலி, டெலிவிஷன் மற்றும் பத்திரிகை உள்ளிட்ட சகல தகவல் சாதனங்களூடாகவும் இந்த இராணுவக் குவிப்பிற்கு நியாயம் கற்பிக்கும் விதத்தில் இந்தியாடுடே கட்டுரையில் வெளிவந்த ரெயினிங் விஷயம் பிரசுரிக்கப்பட்டது. இதுவே இந்த கட்டுரை பிரசுரிக்கப் பட்டதன் பின்னணி பற்றிய சந்தேகத்தை எழுப்பப் போதுமானதாகும். இந்தக் கட்டுரை கொண்டிருந்த தப்பான தகவல்களும், அதில் சம்பந்தப்பட்டிருந்த விஷயங்களும் ஏற்கனவே சகல பத்திரிகைகளிலும் வெளிவந்தவையும் பாராளுமன்றத்தில் வெளிவந்தவையுமேயாகும். அப்படி இருக்க ஏதோ புதுவிஷயம் கேள்விப் பட்டதுபோல இந்தக் கட்டுரை திடீர் முக்கியத்துவம் பெற்றது எவரையும் சந்தேகத்திற்குள்ளாக்கு மென்பதில் ஐயமில்லை. தென்னிலங்கை இடதுசாரிகளின் பத்திரிகைகளான "தொழிலாளர் பாதை,""அத்த" என்பவற்றில் வந்ததகவல்களை நாம் நிராகரிக்க எந்தக் காரணமுமில்லை. இந்தப் பத்திரிகையை வெளியிடுகின்ற நிறுவனத்திற்கும் அரசாங்க அமைச்சருக்கும் கடந்த காலங்களில் இருந்த 'சினேக' உறவுகள், இது ராஜாங்க அமைச்சின் திட்டமிட்ட நடவடிக்கைகளாக இருக்கலாம் என்பதை உறுதிப் படுத்துவதாக உள்ளது. இந்தக் கட்டுரையின் நோக்கம் எப்படி இருந்த போதும், இது பற்றிய மட்டு மீறிய பிரச்சாரத்தை இலங்கை அரசு மேற்கொண்டது. சிங்கள மக்கள் மத்தியில்மேலும் இன வெறியை ஊட்டி அதனூடாக இனவாத அடியாட்கும்பல் ஒன்றைத் தயார் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த விதமாக அரசு தன்னை தயார் செய்து கொண்டிருக்கையில் இத்தகைய வொரு குண்டு வைப்புச் சம்பவம் புத்திசாலித்தனமான ஒரு நடவடிக்கையா என்ற சந்தேகம் யாருக்கும் எழலாம். எதிரி தன்னை பலமாக தயார் செய்துகொண்டு யுத்தத்தினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கையில், மக்களை தயார் செய்வதில் அக்கறை காட்டாது தொடர்ந்தும் தாக்குதலில் ஈடுபடுவது மிகவும் ஆபத்தானதாகும். மக்களை அணிதிரட்டும் விதத்தில் பரவலாக வேலை செய்வதனை விடுத்து இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவது மக்களை வீணாக பலி கொள்ள வைக்கும். கடந்த காலங்களின் படிப்பினைகளை இன்னமும் நாம் கணக்கிலெடுக்காமல் நடப்பது மிகவும் தவறான ஒரு விடயமாகும்.

மக்கள் மத்தியில் மைய அமைப்பு பரவலாக கட்டப்படாத நிலையிலும் தாக்குதல் தவிர்க்க முடியாமல் தேவைப்படலாம். அப்படியான தவிர்க்க முடியாத வேலைகள்

தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் வலிந்து தாக்குதலில் ஈடுபடுவதை தவிர்ப்பது அவசியமானதாகும். மக்களை, மக்கள் போராட்டத்திற்கான ஸ்தாபன அணிகளாக ஒன்று திரட்டுவதை செய்கையில் ஏற்படும் நடைமுறைச் சிக்கலுக்காக தாக்குதல் தவிர்க்க முடியாது ஏற்படலாம். ஆனால் வெறுமனே வலியச் சண்டைக்குப் போதல்போல தாக்குதலில் ஈடுபடுவது மிகவும் தவறான விடயமே.

அமைப்பாக்கப்படாத மககள் மத்தியில் இராணுவக் காடைத்தனங்களுக்கு வழிகோலும் விதத்தில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகவும் மோசமான விளைவுகளை உருவாக்கும். மக்கள் தவிர்க்க முடியாது தன்னெழுச்சியாக போராடக்கிளம்புகின்ற நிலை ஏற்படும். தன்னெழுச்சியான போராட்டமென்பது அடிப்படையில் மிகவும் பாதகமான இயல்புகளை கொண்டுள்ளது. தன்னெழுச்சியான போர்ராட்டம் என்பது ஒரு ஆத்திர வெறியைத் தணிக்கின்ற ஒரு நடவடிக்கையாகவே அமையும். உணர்ச்சி வழி போகும் இந்த நீண்ட போக்கற்ற தன்னெழுச்சியான தாக்குதலானது விடுதலைக்கான இலக்கை நோக்கிய எமது பாதையில் தடங்கலையே கொடுக்கின்றது. எனவேதான் தன்னெழுச்சியான போராட்டம் எப்போதும் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உதாரணமாக யாழ் சம்பவத்தில் இராணுவத்தினரின் தாக்குதலை எதிர்த்து மக்கள் தாமும் தாக்குதல் நடத்தினார்கள் என்பது ஒரு புதிய மிகவும் அக்கறை தரக்கூடிய விடயமாயினும், இதிலிருந்த கட்டுப்படாற்ற எதேச்சைப் போக்கு வீண் அழிவுகளிலும் தவறான நடவடிக்கைகளிலும் கொண்டுபோய் விட்டுள்ளது. சிங்கள மகா வித்தியாலயம், பௌத்தவிகாரை, சிங்களக் கடைகள் போன்றவற்றின் தாக்குதல்கள் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியவை ஆகும். சிங்கள இனவாத அரசின் தூண்டுதலில் யூலைக் கலவரங்கள் மிகவும் மோசமாக நடாத்தி முடிக்கப்பட்டதும், சிங்கள இனவெறிக் குண்டர்கள் கொள்ளைகள், படுகொலைகள், தீவைப்புகளில் வேகமாக செயல்பட்டது உண்மைதான், ஆயினும் நாமும் அவ்வாறே நடந்துகொள்ளமுடியாது. ஏனென்றால் இனப்படுகொலைகளும் மற்றும் இவையுள்ளிட்ட அராஜக நடவடிக்கைகளும் கூலிப்படைகளாலும் இனவெறி குண்டர்களாலும் செய்யப்படுபவையேயன்றி விடுதலைக்காக போராடும் மக்களால் அல்ல. நாம் விடுதலைக்காக போராடும் மக்கள், விடுதலைக்கு பாதகமளிக்கக்கூடிய எத்தகைய அவச் செயலிலும் ஈடுபடக்கூடாது. உண்மையில் அன்று நடைபெற்ற விகாரை உடைப்பு பாடசாலை எரிப்பு, கடையுடைப்பு சம்பவங்கள் வெறும் உணர்சி வரப்பட்ட ஆத்திரத்தை தணிக்கின்ற நடவடிக்கைகளே அன்றி இவற்றால் வேறெந்த இலாபமும் இல்லை. இவை அசல் இனவாதத் தன்மையையே கொண்டிருந்தன இதற்கு அடிப்படைக் காரணமே. இந்த மக்களின் தன்னெழுச்சியான போக்குத்தான்

அமைப்பாக்கப் படாத, ஸ்தாபனமயமாக்கப் படாத மக்கள் கும்பலாக எதிர்க்கும் நிலையை உருவாக்குகின்ற தன்னெழுச்சியான போராட்டத்தின் இயல்பே இப்படித்தான் இருக்கும். இது விடுதலைப் போராளிகளை இனவாதியாக காட்டவே உதவிசெய்கிறது. உண்மையில் இந்த அராஜக செயல்பாடுகளின் தன்மை என்னவென்றால் இப்போராட்டம் ஒழுங்குமுறையற்ற கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளாக, வெறும் வெறியைத் தணிக்கும் செயல்களாக மட்டும் இருப்பதால், தூரநோக்கற்ற இனவ இலகுவில் முறியடிக்கப்பட்டுவிடக் கூடியவை. இந்த அராஜக நடவடிக்கைகளின் மற்ற அம்சம் இதை உருவாக்கிவிட்டவர்களால்கூட இதைக் கட்டுப்படுத்த முடியாது என்பதாகும்.

எனவே இத்தகைய தன்னெழுச்சியான நடவடிக்கைகளை நிராகரித்து சரியான பாதையில் மக்களை போராட்டத்திற்கு வழிகாட்ட வேண்டுமாயின் அவர்கள் மத்தியில் பரவலான அமைப்பு ஒன்றைக் கட்ட வேண்டும். மக்களை ஸ்தாபனரீதியில் ஒன்றிணைக்கும் செயலில் ஈடுபடாது, அவர்களை ஒழுங்கு கட்டுபாடு என்பவற்றிற்கு உட்பட்டு போராட்டத்தை தயார் செய்யாவிடின் எமது போராட்டத்தையும் இறுதி இலக்கை

யும் நாம் கெடுத்தவர்களாவோம். தன்னெழுச்சியான போராட்டம்பிற்போக்காளர்களாலும் எதிரிகளாலும் இலகுவில் கையாளப் படக்கூடியது என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

இந்த யாழ் சம்பவங்கள் எமக்கு உணர்த்தும் படிப்பினை இதுதான். மக்கள் உடனடியாக போராட்டத்திற்கு அணி திரட்டப்பட வேண்டும் ஒழுங்கமைக்கப் பட்ட ஸ்தாபன வடிவுள் அவர்கள் ஒன்றிணைக் கப்படவேண்டும் இதில் தவறுவோமாயின் வீண்படுகொலைகளும் அராஜக நடவடிக்கைகளும் தவிர்க்க முடியாததைவையாக வந்தே சேரும்.

## 4. புத்தூர் மக்களின் குடியிருக்கும் உரிமை

தமிழீழ விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் பல்வேறு விதமான பிரச்சனைகள் பல்வேறுவடிவங்களில் இரண்டாம் மூன்றும் பட்சமுறைகளாக இருப்பதை யாரும்மறுக்கமுடியாது. தமிழீழ தேசிய விடுதலைக்கான தேவை மிகவும் வலுவடைந்து வருகையில் இத்தகைய முரண்பாடுகள் இரண்டாம் பட்சமானவையாகி விடுகின்றன என்ற போதும் இவைகள் அவசியம் களைந்தெறியப் படவேண்டியவையே என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் குதித்துள்ள சகல இயக்கங்களும் இத்தகைய பிரச்சனைகளையிட்டு கவனமற்று இருப்பார்களானால் தமிழீழம் நாம் எதிர் பார்க்கும் தமிழீழ மக்கள் குடியரசாக உருவாக முடியாது போய்விடுவது சர்வ நிட்சயமாகும்.

உதாரணமாக அண்மைக் காலங்களில் புத்தூரில் நடந்த சம்பவங்களை பற்றிச் சொல்லலாம், அங்குள்ள வறிய கூலி விவசாயிகள் தாங்கள் காலம் காலமாக குடியிருந்த நிலத்திலிருந்து நிலச் சொந்தக் காரர்களால் பலவந்தமாக வெளியேற்றப் பட்டுள்ளார்கள். அரச உதவியுடன் இதைச் செய்த அந்நிலவுடமையாளர்கள் அந்த வறிய மக்களின் குடியிருக்கும் உரிமையை மறுத்ததுடன் அவர்களுக்கு காணியை விலைக்கு விற்கும் உரிமையையும் மறுத்துள்ளனர். புத்தூரில் தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்துவந்த இந்தவறிய மக்களது குடிசைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. கிட்டதட்ட 15 குடும்பங்கள் இன்று குடியிருக்கவசதியின்றி நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இத்தகைய ஒரு அடாவடித்தனமான செய்கையைமனிதாபிமானம் கொண்டஎவராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. இம்மக்கள் தமது குடியிருக்கும் உரிமையைநிலை நாட்டும் நோக்குடன் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்த திட்டமிட்டிருந்தனர் ஆனால் சமீப காலமாக எமது தமிழீழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசபயங்கரவாதத்தின் காரணமாக உருவாகியுள்ள நெருக்கடியை உத்தேசித்து அவர்கள் தமது போராட்டத்தை ஒத்திப் போட்டுள்ளனர்

எப்படிஇருப்பினும் அடிப்படை ஜனநாயக உரிமை மறுப்புகட்கு எதிராக போராட எழுந்துள்ள இந்த ஏழை விவசாயிகளினது போராட்டத்திற்கு பரிபூரணமான நிபந்தனையற்ற ஆதரவு நல்குவதும் ஒவ்வொரு தமிழீழ விடுதலைப் போராளியினதும், இயக்கத்தினதும் கடமையாகும். அதேவேளை தேசிய விடுதலை ஒன்றின்மூலமே இத்தகைய அடாவடித்தனமான செயல்களை முற்றாக உடைக்கும் நோக்கில் ஆப்பு வைக்க முடியும் என்பதை உணர்ந்து செயல்படுவது அவசியமானதாகும்.புத்தூர்மக்களைப்பொறுத்தவரையில் அவர்கள் தமது போராட்டத்தை ஒரு அறிவியல் போராட்டமாக விஸ்தரிப்பதும் அத்தகைய ஒரு அமைப்பில் தம்மை ஒன்றாக்கிக் கொள்வதும் அவர்களது ஜனநாயகப் போராட்டத்திற்கும் வெற்றிக்கும் மிகவும் அவசியமாகும்.

தேசிய விடுதலை போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் எமதுமக்களை பிளவு படுத்தும் போக்கில் இந்த உள் முரண்பாடுகள் வளர்வதை தடுத்து உடைப்பதை தமது நோக்கமாக கொண்டு அரசியல் நடவடிக்கைகளை வரையறுத்துக் கொள்வது சகல விடுதலை இயக்கங்களினதும் கடமையாகும்.

## 5. அலென் தம்பதிகள் கடத்தல்

அமெரிக்கத் தம் பதிகள் கடத்தல் நாடகம் சற்றேனும் எதிர்பாராத விதத்தில் சப்பென்று முடிவுற்று விட்டது. அரசிற்கும் பந்தோபஸ்து படைக்கும் பலத்த ஏமாற்றத்தை அளித்திருக்கவேண்டும். கடத்தப் பட்டதும் கடத்தல்காரரை மிகவும் கேவலமாகத் திட்டிப்பிரச்சாரம் செய்த அரசு காலக்கெடுநெருங்கும்போது மிகவும் மன்றுட்டமாகக் கேட்கத் தொடங்கிய அரசு விடுவிக்கப்பட்டதும் திரும்பவும் "கெக் கெக்கே" விடத் தொடங்கியது மிகவும் சுவையான விடயம். எப்படி இருப்பினும் அலன் தம்பதிகளின் கொழும்புப் பேட்டி அரசு, கடத்தல்காரர்களை பொய்யர்கள் கயவர்கள், கொலைகாரர்கள், அயோக்கியர்கள் என்றெல்லாம் பிரச்சாராம் செய்த போதும் அதை முறியடித்து விட்டதென்றே சொல்லவேண்டும்.

இந்திய அரசினதும் தமிழ்நாடு அரசினதும் உதவிகளை தந்திரோபாய ரீதியில் ஓரளவு பயன்படுத்திக் கொள்ளக் கூடிய இன்றைய சூழலில் இத்தகைய ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டதன்மூலம் அவர்களுக்கு ஒரு நெருக்கடியை உலக அரங்கில் ஏற்படுத்தியதுபுத்திசாலித்தனமானதா என்ற சந்தேகம் யாருக்கும் எழ வாய்ப்புண்டு. ஆனுலும் கேட்ட கோரிக்கைகள் ஏதும் நிறைவேருமல் இருக்கும் போதே சி. ஐ. ஏ ஏஜெண்டுகளான அவர்களை விடுதலை செய்தது எல்லாவிதத்திலும் சந்தேகத்தையே கிளப்புவதாக உள்ளது. அவர்கள் விடுதலை செய்யப்பட்டமைக்கு பின்வரும் காரணங்கள் கூறப்பட்டன.

1. இந்திய, தமிழ்நாடு அரசுகளின் வேண்டுகோள்.
2. மனிதாபிமான அடிப்படை
3 உலகுக்கு எமது பிரச்சனைகளை எடுத்துக் காட்டவேண்டும் என்ற எமதுஇலட்சியம் நிறைவேறியுள்ளமை.

இதில் இந்த மூன்றுவது காரணம் தவிர்ந்த ஏனையவை ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக இல்லை.

இலங்கை அரசு மட்டுமீறி மனிதாபிமானம் பற்றியும் பயங்கரவாதம் பற்றியும் பேசியதன் போலித்தனத்தை இச்சம்பவத்தின்மூலம் நன்கு தோலுரித்துக் காட்டக் கூடியதாக அமைந்திருந்தது. வெலிக்கடையில் தமிழ்ப் போராளிகளைப் படுகொலை செய்வித்த இந்த அரசு யாழ்ப்பாணத்தில் மனித உடல்களைத் தெருவோரங்களில் போட்டுப் பொசுக்கிய இந்த அரசு, சுன்னுகத்தில் அப்பாவி மக்களைச் சுட்டுப் பொசுக்கிய இந்த அரசு, மனிதாபிமானம் பற்றிப் பேசுவதன் போலித்தனத்தை இதன் மூலம் தெளிவாக்கக் கூடியதாக இருக்கின்றது. யூலைப் படுகொலைக் காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிமக்கள்கொலைசெய்யப்பட்டபோது இந்த அரசின் மனிதாபிமானமும் பிரேமதாசாவின் பௌத்தமதக் கொள்கைகளும் எங்கே

### சிறையிலிருந்து எழுதும் கடிதம்

அம்மா,
நண்பர்கள் என்னைத்தேடி வந்து
கதவிலே தட்டும்போதெல்லாம்
தாயே, நீவெம்பிக் கண்ணீர் மல்குவதை
எண்ணிநான் வேதனைப் படுகிறேன்.

ஆனுல் வாழ்க்கையின் சிறப்பு என்
சிறையிலே பிறக்கிறதென்று
நான் நம்புகிறேன் அம்மா
என்னை இறுதியில் சந்திக்க வருவது
ஒரு குருட்டு வெளவாலாய்
இருக்காதென்றும் நான் நம்புகிறேன்
அது பகலாய்த்தான் இருக்கும்
அது பகலாய்த்தான் இருக்கும்

—சமீஹ் அல் காசீம்

நன்றி: பலஸ்தீனக்க விதைகள்

போயினவோ தெரியவில்லை. இரண்டே இரண்டு அமெரிக்கர்களுக்காக இவ்வளவு அதிகமாகக் கண்ணீர் வடித்த இந்த அரசு தமிழர்கட்காக குறைந்தபட்ச அனுதாபம் கூடக் காட்டுவதில்லை என்பது மிகவும் தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

ஜே.ஆர் றீகனுக்கு எழுதிய கடிதமும் சரி, அத்துலத் முதலியின் பேச்சுக்களும் சரி, உண்மையில் அவர்களுக்கு அமெரிக்கத் தம்பதிகளைக் காப்பாற்றுவதிலிருந்த அக்கறையை விடவும், தமிழீழ விடுதலைப் போராளிகள் மீது சேறு பூசுவதிலேயே அதிகமாக அக்கறை இருந்தது என்பதைத் தெளிவாகக் காட்டின. உண்மையில் இந்த அமெரிக்கத் தம்பதிகள் கொல்லப்பட்டிருந்தால் அவர்களது பிரச்சாரம் வெற்றியடைந்திருக்கும். எனவே அவர்கள், தம்பதிகள் கொல்லப்படுவதையே எதிர் பார்த்தார்களென்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் இந்த நடவடிக்கையினால் சில நல்ல அம்சங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்றென்ற போதும் சில படிப்பினைகளை இதிலிருந்து கற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது.

1. இந்திய அரசும் சரி, தமிழ்நாடு அரசும் சரி எந்த நேரமும் தமது நலன்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடுமாயின் தமிழீழப் போராளிகளைக் கைவிடத் தயங்கமாட்டார்களென்பது.

2. எமது இயக்கங்களில் இவ் அரசுகள் மேலாதிக்கம் செலுத்து கின்றன என்பது.

உண்மையில் தமிழக, இந்திய அரசுகள் வேண்டுகோள் விடுத்தனவா அல்லது மிரட்டினவா என்பது சந்தேகமாகவே இருக்கின்றது. உலகெங்கும் வாழுகின்ற தமிழ் மக்களின் எதிர்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டிவரும் என்ற எம்.ஜி. ஆரின் பேச்சில் வேண்டுகோளை விடவும் மிரட்டல் தொனியே அதிகமாக இருந்தது. நாம் ஒரு போதும் பயங்கரவாதிகளை ஆதரிக்கவில்லை, பிரிவினையை நாம் எதிர்க்கிறோம் என்ற இந்திய அரசின் பேச்சுக்களெல்லாம் தமது இரகசிய மேலாதிக்கப் போக்கிற்கான அத்திவாரங்களைப் போடுவதையே காட்டுகின்றது.

இந்தக் கடத்தலின் நோக்கம் உண்மையில் எதுவாயிருந்த போதும் இந்திய அரசின் "வேண்டுகோளுக்காக" விடுதலை செய்ததென்பது இந்த இயக்கத்தின் மீதான மேலாதிக்கத் தொடர்பினைப் பற்றிய சந்தேகத்தினை வலுவூட்டுவதாகவுள்ளது. தந்திரோபாயரீதியாக இந்திய அரசுடன் ஓரளவுக்கு ஒத்துப்போவது அவசியமேயாயினும் கட்டுப்பட்டுப் போவதை ஏற்க முடியாது. எனவே இப்படியான சூழ்நிலைகளில் இம்மாதிரி நடவடிக்கைகளை மிகவும் புத்திசாலித்தனமாகக் கையாள வேண்டியது அவசியமானதாகும்.

அடுத்ததாக மனிதாபிமான அடிப்படை என்பதும் ஏற்கப்பட முடியாத ஒன்று. உலக மக்களின் எதிரிகளான இரண்டு C. I. A. ஏஜெண்டுகளை விடுதலை செய்வதில் எந்தவிதமான மனிதாபிமானத்திற்கும் இடமில்லை. இவர்கள் C. I. A. ஏஜெண்டுகள் என்று கூறிக் கொண்டே மனிதாபிமானத்திற்கு மதிப்பளிப்பது சற்றும் பொருத்தமில்லாத ஒன்று. இந்த ஏஜெண்டுகளை அவசியம் கருதியோ, தவிர்க்க முடியாமலோ விடுதலை செய்தாலும் மீண்டும் அவர்கள் இங்கு வருவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதையும், திரும்பவும் அவர்கள் இங்கு வருவார்களாயின் ஆபத்தை எதிர் நோக்கும் வார்களென்பதையும் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

ஆயினும் இலங்கை அரசினதும் இங்குள்ள நிலைமைகளினதும் தன்மைகளை ஓரளவுவெளிக்காட்ட இது பயன்பட்டது என்பதை மறுக்க முடியாது. வெலிக்கடையில் தற்செயலாகத் தப்பிய "பயங்கரவாதிகள்" இந்த அமெரிக்கர்கள் மீது அனுதாபம் காட்டக் கோரியது, யாருக்கு உண்மையில் மனிதாபிமானம் உண்டென்பதை நன்கு வெளிக்காட்டியுள்ளது ●

## நூல் விமர்சனம்

# சமுத்திரனின் இலங்கை தேசிய இனப்பிரச்சனை

சமுத்திரனால் இலங்கைத் தேசிய இனப் பிரச்சனை பற்றி சிங்கள பெருந்தேசிய இன வாதம் - அதன் அடிப்படைகளும், மேலாதிக் கமும் எனும் தலைப்பிட்டு எழுதப்பட்ட நூலை விமர்சிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராளிகளிடையே ஆழமான தத்துவ விவாதத்தை உருவாக்க முடியும் என்ற அடிப் படையிலேயே இவ்விமர்சனக் கட்டுரை வெளி யிடப்படுகின்றது. பொதுவாக விமர்சனங்கள் கடந்த காலங்களில் இரண்டு விதமாகவே அமைந்தன. தமக்கு வேண்டியவர் அல்லது ஆசிரியரால் சொல்லப்படும் விடயத் தில் சில அம்சங்கள் தாம் கொண்டிருக்கும் கருத்திற்கு ஒத்தமைவதாக இருந்துவிடின் தவறுகளையோ குறைபாடுகளையோ சுட்டிக் காட்டுதலை விடுத்து வெறுமனே புகழுரை வழங்கி எழுதுபவரின் வளர்ச்சியையும் தடுப்ப தோடு ஆழமான விவாதங்கட்கும் இடமின்றிச் செய்தன, இந்த முதலாம் வகை விமர்சனங் கள். இரண்டாம் வகை விமர்சனங் களை எடுத்துக்கொண்டால் இவை குறைபாடு களையும் தவறுகளையும் மட்டும் தேடிப் பிடித் துத் தாக்குவதன் மூலம் நல்ல விடயங்களை களையெல்லாம் நழுவ விட்டுவிடுவதோடு எழுத்தாளரின் எழுத்தாற்றலையும் தூண்டாது விட்டுவிடும் போக்கையே கொண்டிருந்தமை யாகும். விமர்சனத்தின் நோக்கம் நல்ல அம் சங்களையும், தீய அம்சங்களையும், சரியாக ஆராய்வதே.

சமுத்திரன் தனது முன்னுரையிலே குறிப் பிட்டதுபோல் அவரை இந்நூலை, அவசரமாக எழுதத் தூண்டியவை யூலைக் கலவரத்தின் குரூரமும் கொடுமையும் மிகுந்த செய்திகளே. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மனிதர்கள் உணர்ச்சி மேலீட்டினால், முழுமையைப் பார்க் கத் தவறி அறிவு பூர்வமாகச் சிந்திக்காது விடுகின்றனர். இக்குறைபாடு, ஆங்காங்கே சில இடங்களில் இந்நூலில் வெளிப்படுகின் றது. போதியளவு ஆதார நூல்கள் இன்மை யால் முழுமையின்மையும் சில இடங்களில் வெளிப்படுகின்றது. அவர் தனது முன்னுரை யில் இனவாதம் ஒரு கருத்தமைவு வடிவத்தை எவ்வாறு பெற்றது என்பது பற்றி குறிப்பிட் டுள்ளார். அண்மைக் காலங்களில் எமது நாட்டிலும் சமூகப் பிரச்சனைகளினடிப்படை யான பொருளாதாரத்திற்கும் (Economic Base) மேல்கட்டுமானத்திற்கும் (Supers structure) இடையிலான உறவு பற்றிய வாதங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன. பொருளாதாரக் காரணங்கள்தான் சமூகப் பிரச்சனைகளின் அடிப்படை என்பது விஞ்ஞான பூர்வமான சரியான கருத்தாகும். மார்க்ஸிய ஆய்வாளர்கள் பலராலும்கூட இக்கருத்து கடந்த காலங்களில் தவறாகக் கை யாளப்பட்டது மிகவும் துரதிஷ்டமானதாகும். உண்மையில் பொருளாதாரம் அடிப்படை யானதாயிருப்பினும்அதன்விளைவாகஉருவான மேல்கட்டுமானமானது அடிப்படையின்மீது தனது செல்வாக்கைச் செலுத்துகின்றது. பொருளாதாரத்திற்கும் மேல்கட்டுமானத் திற்குமிடையிலான உறவு இரு வழியானது. (Reciprocal Process) இந்த அடிப்படையி

லேயே சமுத்திரன் தனது கருத்தமைவைப் பார்த்துள்ளார்.

இது சரியானதே. கருத்தமைவு கூட அரசு, கல்வி, கலாச்சாரம், நீதித்துறை, உளவியல் போன்றவைபோல் மேல்கட்டுமானமே. சமுத்திரன் இதனை மேலும் விளக்குகையில் தெளிவாகச் சொல்கிறார். சமூகப் பிரச்சனைகளுக்கே இன மத அடிப்படையிலான வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டு அவை கருத்தமைவு வடிவம் பெற்று ஜன சிந்தனைகளிலும், நம்பிக்கைகளிலும் ஓர் பரவலான இடத்தைப் பெற்றுவிடும்போது இனவாதக்கருத்தமைவின் ஜனரஞ்சகமான ஆதிக்கத்திற்கு வேண்டிய சமூக உளவியல் ரீதியிலான அடித்தளம் உருவாகி விடுகின்றது. இதனை மேலும் விளக்குகையில் அவர் இனவாத அரசியலுக்கும் குறைவிருத்திப் பொருளாதாரத்திற்கும் நேரடித் தொடர்புண்டு என்று குறிப்பிடுகின்றார். இதுவும் சரியான கருத்தே. ஆனாலும் குறைவிருத்திக்கான அடிப்படைக் காரணங்களேயும் சமூகப் பிரச்சினைகளினையும், சரியாக விவரிக்காததன் மூலம் அந்த இடத்தில் முழுமையின்மை காணப்படுகின்றது. தன் பூரணத்துவமான வர்க்க மேலாதிக்கத்தை நிலைநாட்டக் கூடிய முதலாளித்துவ வர்க்கம் நம் நாட்டில் உருவாக்க முழுமை பெறவில்லை. குறைவிருத்தி எனப்படுவது அடிப்படையில் விரிவும் ஆழமும் தரவல்ல முதலாளித்துவ மாற்றமின்மையைக் குறிக்கின்றது. குறைவிருத்தியின் இயக்க விதிகள் முதலாளித்துவ வளர்ச்சியின் இயக்கவிதிகளிடமிருந்து வேறுபட்டவை. குறைவிருத்தி அமைப்பிற்குள் பண்டமயமாக்கல் (Commoditization) பரவும்போது சிறிய பண்ட உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும முக்கியத்துவம் பெறுகின்றனர். இங்கு வர்த்தக மூலதனத்தின் தனியாதிக்கத்திற்கு உற்பத்தி கீழ்ப்படுத்தப்படுகின்றது. இது சரியானதாயிருப்பினும் இது எப்படி ஏற்பட்டதென்பதை இங்கு தெளிவாக சொல்லியிருக்க வேண்டும். இவ்விடத்தில் நாம் காலனித்துவ பொருளாதாரம் என்ற சொல்லைப் பாவிப்பது பொருத்தமாயிருக்கும். குறைவிருத்தி என்று சொல்லும்போது முதலாளித்துவ பொருளியலாளர்கள் உருவாக வாய்ப்புண்டு. ஏகாதிபத்தியம், காலனித்துவநாடுகளின் இயல்பான முதலாளித்துவ வளர்ச்சியை ஏற்படவிடாது தடுத்ததுடன் அந்நாடுகளிலிருந்து பிரபுத்துவ சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்தும் காணப்பட்டது. இதனாலேயே இந்நாடுகளில் நிதி மூலதனம் பிரதான இடத்தைப் பெறாது, வர்த்தக மூலதனத்தின் தனியாதிக்கம் ஏற்பட்டது. முதலாளித்துவ வளர்ச்சியின்மையால், பலமான முதலாளி வர்க்கமோ, தொழிலாளி வர்க்கமோ உருவாகவில்லை. சிறு உடமையாளரும், குட்டி பூர்ஷ்வாபுத்தி ஜீவிகளும் தேசியவாதத்திற்கு உருவமும் உள்ளடக்கமும் கொடுக்கிறார்கள். கலாச்சார தேசியவாதமென்பதே மிகவும் ஆபத்தானது எனும் தொனி சமுத்திரனின் கட்டுரையில் தொனிக்கிறது.

இது தவறானது. சில வரலாற்றுக் கட்டங்களில் கலாச்சாரத் தேசியவாதத்திற்கு முற்போக்குப் பாத்திரம் உண்டு. என்றுமே சிங்கள மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை நடாத்தவில்லை என்பது போன்ற கருத்தைவாசகர்கள் புரிந்துகொள்ள வாய்ப்புண்டு. ஆரம்பத்தில் கண்டிய விவசாயிகள் கலகம், வீர புரன் அப்புவின் கிளர்ச்சிகள் போன்றவை ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளாக இருந்தன. பின் குட்டிபூர்ஷ்வா தேவைகளுக்குள் அடைபட்டுப் போன கலாச்சார தேசியவாதம், பௌத்த சிங்கள இனவாதமாகப் பரிணமித்து தமிழ், முஸ்லிம் விரோத நடவடிக்கைகளைச் செய்ய வழிவகுத்தது. இவ்வாறு பௌத்த சிங்கள இனவாதத்தினை முன்னெடுத்தவர் அநாகாரிக தர்மபாலரவே. கடந்தகால முற்போக்குவாதிகள் பலராலும் வானளாவப்புகழப்பட்ட தர்மபாலாவை கோபுரங்களிலிருந்து கீழிறக்கி உண்மை உருவத்தை சமுத்திரன் இந்நூலில் காட்டியுள்ளார். தர்மபாலாவின் வர்க்கப் பின்னணியையும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

சிங்கள மகாசபை பற்றியும் S.W.R.D. பண்டாரா நாயக்கா பற்றியும் சமுத்திரன் சொல்லிய விடயங்கள் சரியாக இருப்பினும் இன்னமும் சிலவற்றைச் சொல்லவேண்டும். இலங்கையில் இனப் பிரச்சனைக்கான தீர்வாக சமஷ்டி முறையை முன்வைத்தவர் பண்டார

நாயக்காதான். சட்டசபை காலத்திலேயே அவர் கண்டி, குருநாகல், யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இடங்களிலும் போய்ப் பகிரங்கமாகக் கூட்டம் வைத்து இக்கருத்தை வெளியிட்டார். இதனையே தமிழரசுக் கட்சியினர் தமது கொள்கையாகப் பின்னர் முன் வைத்தனர்.

தமிழ் அரசியல் விமர்சகர்களோ, ஆய்வாளர்களோ 1915 சிங்கள, முஸ்லிம் கலவரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. நண்பர் சமுத்திரன் அதனை முக்கியப்படுத்தி அதன் பின்னணிகளை வெளிப்படுத்தியிருப்பதன் மூலம் தர்மபாலா போன்றோரை மேலும் இனம் காண வாய்ப்பேற்பட்டுள்ளது. 1915 இனக்கலவரத்தின் முழுப்பொறுப்பையும் தர்மபாலாமீது போட்டாலும் தவறில்லை. 1948ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டமை அமைதியாக நடைபெற்றமையால் நம்மவரிடையே அதன் தாக்கம குறைந்தளவு பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளது. சிங்கள இனவாத அரசியலின் வளர்ச்சியில் 1915ம் ஆண்டையும்விட 1948இல் இந்த இரத்தம் சிந்தாத வெற்றி மிகவும் முக்கியம் பெறுகிறது என்று சொல்வதன் மூலம் அதன் கொடுமையை சரிவர வெளிக்காட்டியுள்ளார்.

1956இல் S.W.R.D.இன் ஆட்சியைப் பற்றிச் சொல்லும்போது அவரது ஏகாதிபத்திய எதிர்ப்பை சொல்லாதுவிட்டுவிடுகின்றார். முதன் முதலில் சிங்களம் மட்டுமே தீர்மானம் U.N.P.யின் களனி மாநாட்டில் J.R. ஆல் முன் வைக்கப்பட்டது. பின்னரே S.W.R.D. ஒரு படி மேலே சென்று 24 மணி நேரத்தில் சிங்களம் என்று முன் வைத்தார். பண்டாரநாயக்கா பௌத்த சிங்கள இனவாதத்தின் சிறந்த பிரதிநிதியாக செயற்பட்டு தர்மபாலாவின் வாரிசாக செயற்பட்ட அதே சமயம் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராயும் இருந்ததாலேயே தவிர்க்க முடியாமல் பிரதேச சபைகள் உருவாக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார். ஆனாலும் அவரின் உறுதியின்மையும் சந்தர்ப்பவாதப் போக்கும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தையே கிழித்தெறிய வைத்தது. தர்மபாலாவின் தோள்களிலமர்ந்திருந்த பண்டாரநாயக்கா தன் சம காலத்து சமூகத்தின் அரசியல் தேவைகளைப் பற்றிய கணிசமான கிரகிப்பை கொண்டிருந்ததால் அவரால் சிங்கள பௌத்த வாதத்திற்கு மேலும் வலுவளிக்க முடிந்தது. இதுவே அவரின் சந்தர்ப்பவாதம்; இதுவே அவரின் பலம். இதுதான் அவரின் கொலைக்கும் வழி வகுத்த பயங்கரப் பலவீனமும் என்றால் அது மிகையாகாது என்று சொல்லிய விடயம் மேலும் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். பண்டாரநாயக்காவின் காலனித்துவ எதிர்ப்புக்கொள்கை அவரின் கொலைக்குப் பிரதான காரணம். அந்நிய சக்திகள் இதன் பின்னணியிலிருந்ததை யாராலும் மறுக்கமுடியாது. பல அமெரிக்க நூல்கள் இதற்கு ஆதாரமாயுள்ளன.

குட்டி பூர்ஷ்வா தேசிய முதலாளிகளின் பிரதிநிதிகளால் ஊசலாடாமலும் சந்தர்ப்பவாதத்திற்கு இரையாகாமலும் இருக்கமுடியாது என்பது வரலாறு நமக்குப் புகட்டிய பாடமாகும். அவர்களது குறுகிய தேசியவாதம் முழுமையான தேசியவாத வளர்ச்சிக்குத் தடையாயிருப்பதால் அந்நிய சக்திகளிடமிருந்து தம்மைக்கூடப் பாதுகாக்க திராணியற்றவர்கள். 1956இல் இங்கு பௌத்த சிங்கள இனவாதம் என்ற கருத்தமைவுக்கு ஏற்பவே இலங்கையின் அரசியல் போக்கு இருந்தது. நண்பர் சமுத்திரன் குறிப்பிட்டது போல தமிழரசுக் கட்சியினரின் தேர்தல் பிரச்சாரங்களில் மக்கள் ஐக்கிய முன்னணியின் பெரும்பான்மை இனவாதத்திற்குப் பதில் கொடுப்பதுபோல் தமிழ் இனவாதம் நிறைந்திருந்தது தமிழரசுக் கட்சியினரின் பிரிட்டிஷ் எசமான விசுவாசம் பற்றியும் நண்பர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இடதுசாரிகள் சம அந்தஸ்து கொள்கையை முன்வைத்தும் தமிழ் பகுதிகளில் ஆதரவு கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான காரணம் இடதுசாரிகளின் இலங்கைப் புரட்சி பற்றிய வரட்டுக் கோஷங்களும் சம அந்தஸ்துக்காகவோ அன்றி பின் முன் வைத்த பிரதேச சுயாட்சிக்காகவோ ஆக்க பூர்வமான எந்த போராட்டத்தையும் நடாத்தாமையே.

கம்யூனிஸ்ட் கட்சி, சம சமாஜக் கட்சியின் இனவாதக் கொள்கையையும் சந்தர்ப்பவாத அரசியலையும் பற்றிய விமர்சனம் சரியானதே. சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களும் ''சிங்களப் பௌத்தர்கள் ஆனார்கள்'' என்று குறிப்பிடும் சமுத்திரன் பிறிதொரு இடத்தில் ''கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு) இப்போது தன் கடந்த காலத் தவறுகளை ஓரளவு உணர்ந்துள்ளதுபோல் சில சந்தர்ப்பங்களில் படுகிறது'' என்று கூறுவது ஆச்சரியத்தையே விளைவிக்கின்றது. அவர்கள் தனியாக இங்கு சந்தர்ப்பங்களில் [illegible] தவறிழைத்தவர்களாயின் அது சரியானது.

ஆனால் சமுத்திரன் சொல்வதுபோல சண்முகதாசனுடன் ஏற்பட்ட தத்துவ வேறுபாட்டிற்குக்கூட இனவாதத்தைப் பயன்படுத்தியவர்களை எப்படி பார்ப்பது? இன்று கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு) தமிழ் மக்கள் போராட்டத்திற்கு ஆதரவுபோல் காட்டுவது உண்மையில் ஆதரவா அல்லது தமது எஜமானர்களின் நலனின் அடிப்படையிலானதா என்பது கேள்விக்குறியே? இலங்கையில் ஆட்சிக்கு வரும் எந்த அரசும் பௌத்த சிங்கள இனவாதத்தைத் தமது கருத்தலைமவாகக் கொள்ளாமல் பதவிக்கு வரமுடியாது என் என்பதையும், தமது இருப்பிற்கும் பாதுகாப்பிற்கும் பௌத்த சிங்கள இனவாதமே அத்திவாரமாக அமைந்துள்ளது என்பதையும் சமுத்திரனின் இந்நூல் வாசகர்கட்குப் புரிய வைக்கின்றது.

மேலும் தமிழ் மக்கள் தவிர்க்க முடியாத சூழ்நிலையிலேயே தனிநாடு எனும் கட்டத்திற்கு தள்ளப்பட்டார்கள் என்பதால் தவிர்க்க முடியாத இத்தேவையை அரசியல் நேர்மையும் புரட்சிகர சிந்தனையும் கொண்ட சகல சிங்களவர்களும் தமிழ் மக்களின் மத்தியில் உருவாகி வரும் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிக்காமல் இருக்கமுடியாது என்று சொல்வதனால் அதன் நீதி மிகு தன்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

இன்று ஒடுக்குமுறைக்கு ஆளாகிப் போராடும் தமிழர்கள் நாளை போராடும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகும் சிங்கள மக்களின் உடனடி நண்பர் என்பதைச் சிங்கள இனவாதம் திரை போட்டு மறைத்துள்ளது. இதிலிருந்து சிங்கள மக்களை விடுவிப்பது சிங்களப் புரட்சிவாதிகளின் கடமை. இதிலிருந்து நண்பர் சமுத்திரன் தமிழீழ போராட்டத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழர்கட்கு நாடில்லை என்பதற்காகவோ தமிழர் பெருமையை மீண்டும் நிலைநாட்டவோ தமிழீழ மக்கள் போராடவில்லை என்பது தெளிவுபடுத்தப் படுகின்றது.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட பொருளாதாரத்திற்கும் இனவாதத்திற்குமிடையிலான உறவை நூலின் கடைசிப் பகுதியில் தெளிவாகக் கூறியுள்ளார். பொருளாதாரம் இனவாத அரசியலை நிர்ணயிக்கும் அடிப்படையாக ஆரம்பத்திருக்கின்றது. ஆனால் இனவாதம் உருப்பெற்றதும் அது பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் உரித்தையும் பெற்றுக் கொள்கிறது. இதனால்தான் பொருளாதார மாற்றம் என்பது இப்போதிருக்கும் பொருளாதாரம்-இனவாதம் என்ற உறவின் அடிப்படையை மாற்றும் ஒன்றாக இருக்க வேண்டும் எனப் புரட்சிவாதிகள் கூறுவர். இதன் ஆழத்தை ஒவ்வொரு விடுதலைப் போராளிகளும் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

தமிழ் மக்களின் இன ஒடுக்குமுறையின் பலாத்காரத்திலும் அநீதியிலும இந்த முழு அமைப்பின் பலாத்காரமும் அநீதியும் மிகவும் பயங்கரமாக வெளிப்படுகின்றன என்று சொல்வதன் மூலம் இந்த அரசின் பாசிசத் தன்மை வெளிக்காட்டப்பட்டுள்ளது. சிங்கள தமிழ் மக்களிடையே போடப்பட்டுள்ள திரையைக் கிழித்தெறிவது சிங்களப் புரட்சிவாதிகளின் கடமையேயன்றி தமிழ்ப் புரட்சிவாதிகளின் கடமையல்ல என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சனையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ள தேசிய இனங்களின் உருவாக்கம், தமிழ்த் தேசிய வாதம், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் என்பவை பற்றி தனியான வெளியீடுகள் அவசிய

மானது. இது முதல் வெளியீடு என்ற வகையில் தேசிய இனம் என்றால் என்ன? என்பதை முன்னுரையில் குறிப்பிட்டிருந்தால் வாசகர்கட்கு விளங்கிக்கொள்ள ஏதுவாயிருந்திருக்கும். மொத்தத்தில் இந்நூல் தமிழீழ விடுதலைப் போராளிகளிடையே விவாதத்திற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

கிண்டல் தொனியுடன் கூடிய சிறந்த எழுத்து நடையும் வாசிப்பவர்கட்கு வாசிக்கும் ஆர்வத்தை தூண்டுவதாயும் ரசிக்கக் கூடியதாகவும் இருந்தது. சில இடங்களில் இன்னமும் எளிமையாயிருந்தால் நன்றாக இருந்திருக்கும். நண்பர் சமுத்திரனை, நாம் குறிப்பிட்டுள்ள மீதி விடயங்களை இந்நூலை விடவும் திறப்பட எழுதி தமிழீழ விடுதலைப் போராளிகட்கு உதவும்படி கேட்டுக் கொள்கிறோம். அவரின் முயற்சிகட்கு இலக்கு ஆதரவும் நல்லாசியும் வழங்குகின்றது. ●

---

சென்னை கடற்கரை காந்தி சிலைக் கருகில் தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சில விடுதலைப் போராளிகள் 9-6-84 அன்று சாகும் வரை உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்களது துண்டுப் பிரசுரம் ஒன்றில், அதே இயக்தைச் சேர்ந்த சுதன், ரமேஸ் ஆகிய இரு விடுதலைப் போராளிகள் அதே இயக்தைச் சேர்ந்தவர்களால் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இவர்களை விடுதலை செய்யக் கோரியே உண்ணாவிரதிகள் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற் கொண்டுள்ளனர்.

இயக்கங்களிடையே ஐக்கிய முன்னணி ஏற்படுத்த வேண்டிய இந்நேரத்தில் இயக்கங்களின் இது போன்ற நடவடிக்கைகள் விடுதலைப் போராளிகளுக்கும் தமிழ் மக்களுக்கும், விடுதலை இயக்கங்களின் மீது நம்பிக்கை இன்மையையும் விரக்தியையும் ஏற்படுததும். இயக்கங்களினுள்ளே சுமுகமாகப் பேசித்தீர்க்கப்பட வேண்டியவை தெருவுக்கு வருவது அழகல்ல.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலி கூறியதை நினைவு படுத்துவது பொருத்தமாயிருக்கும். ''பயங்கரவாத இயக்கங்களை உடைப்பதுதான் எமது அடிப்படையாக இருக்கவேண்டும். எப்படியாவது அவற்றைப் பிளவு படுத்தவேண்டும்.'' இவரது இக்கூற்றை மெய்ப்பிப்பது போன்றே இச்சம்பவம் அமைந்துள்ளது. இவற்றை எமது விடுதலை இயக்கங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்வது நல்லது.

● ●

1970,இல் சிறீமாவோ பண்டாரா நாயக்காவின் ஆட்சியின்போது துரத்தப்பட்ட இஸ்ரேலியர்கள், கமாண்டோக்களாகவும், இராஜதந்திரிகளாகவும் மீண்டும் இங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். பலஸ்தீன மக்களையும், அராபியர்களையும் படுகொலை செய்துவரும் அமெரிக்க அரசின் அடிவருடியான இஸ்ரேலுக்கு அதே அமெரிக்க அரசின் செல்லப் பிள்ளையான ஜே.ஆர். தூதரக வசதியும் செய்து கொடுத்துள்ளான்.

இதனை எதிர்த்து காத்தான் குடியில் ஊர்வலம் சென்ற முஸ்லிம் மக்கள், சிங்கள அரச படைகளினால் சுடப்பட்டுள்ளனர். ஆனால் U.N.P. அரசில் முஸ்லீம் மக்களின் பிரதிநிதியான A.C.S. ஹமீத் வெளிவிவகார அமைச்சராக உள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. முஸ்லீம் மக்களின் இன்னோர் பிரதிநிதியான போக்குவரத்து அமைச்சர் M. H. முகமது 'இஸ்ரேல் தூதரகம் அமைப்பதை அனுமதிக்கமாட்டேன்' என்று சூளுரைத்துமுள்ளார். ஆனால் ஜே. ஆரோ ''சிங்கள மக்களையும், தனது நாட்டையும் பாதுகாக்கவும் பயங்கரவாதத்தை முற்றாக அழித்தொழிக்கவும் எந்த நாட்டின் உதவியையும் வாங்கத்தயங்கமாட்டேன்'' என்றும் ''இஸ்ரேலின் இராணுவ உதவியையும் வாங்க தயங்கமாட்டேன்'' என்றும் தனது பேச்சுகளிலே குறிப்பிட்டு வருகிறான். ●

# இயக்கங்களுக்கிடையே ஐக்கியமும் போராட்டமும்

இலங்கையில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையும், இன ஒழிப்பு வேலைகளும் சிறீலங்கா அரசாற் திட்டமிட்டு நடாத்தப் பட்டு வருகின்றது. முன்பெல்லாம் இனக்கல வரங்களின் போது தாக்குதல்கள், தீவைப்பு, கொள்ளை அடித்தல் கற்பழித்தல் போன்றவை தூண்டிவிடப்பட்டு தன்னிச்சையாகநடந்தன. ஆனால் கடந்த யூலைக் கலவரத்தின் போது நடந்த தாக்குதல்கள், தீவைப்பு, கொள்ளை அடித்தல் போன்ற சம்பவங்கள் ஒழுங்கமைக் கப்பட்ட வடிவில் சீராக நடாத்தப்பட்டன. ராணுவவீரர்கள் நேரடியாகத் தாக்குதலிற் பங்கேற்றனர். விடுதலைப் போராளிகள் 54 பேர் சிறைக்குள்ளேயே படுகொலை செய்யப் பட்டனர். கிழக்கு மாகாணத்தில் தமிழர் களின் நிலங்கள் பறிக்கப்பட்டு அவற்றில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. புத்த பிக்குகளின் தலைமையில், அரச வாகனங்களில் சிங்களவர்கள் கொண்டு வரப்பட்டு வடமுனை போன்ற பகுதிகளில் பெருமளவில் குடியமர்த்தப்பட்டனர். இனக் கலவரங்களிற் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளி நாடுகளிலிருந்து வழங்கப்பட்ட கூடா ரங்கள், உணவுப் பொருட்கள் போன்றவை இவர்களுக்கு வழங்கப்பட்டன. இனக்கல வரத்தைத் தொடர்ந்து J. R. தனது தம்பி H. W. ஜயவர்த்தனவை பல நாடுகளுக்குதூது அனுப்பினன். இதன் பின்னர் பல நாடுகள் சிறிலங்காவுக்கு உதவிகள் அனுப்பின. கட்டு நாயக்கா விமான நிலையத்தைப் பாதுகாக்க நவீன வசதிகளை இங்கிலாந்தும், நான்கு கவச ஹெலிகப்ரர்களையும் ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதென்ற போர்வையில் ராணுவ ஆலோசகர்களை அமெரிக்காவும், கடல் வழி யாக போராளிகள் தப்பிச் செல்வதைத் தடுப் பதற்காக ஏற்கனவே 4 பீரங்கிப் படகுகளை யும், இன்னும் 12 பீரங்கிப் படகுகளையும் தருவதாக சீனவும், சிறீலங்கா இனவெறி ராணுவத்துக்கு பயிற்சியளிப் பதற்காக பயிற்சியாளர்களை இஸ்ரேலும் மற்றும் பாகிஸ் தான் போன்ற நாடுகள் பல உதவிகளையும் கொடுத்துதவின. ஆகவேஇன அழிப்பு, ஒடுக்கு முறைக் கெதிரான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பல நாடுகளின், வல்லரசுகளின் உதவியுடன் நசுக்கப்படும் ஆபத்து உண்டாகி விட்டது. சிங்கள இளைஞர்கள், மாணவர் களுக்கு இனவெறி ஊட்டப் பட்டு ஆயுதப் பயிற்சி தீவிரமாக அளிக்கப்பட்டு ஓர் இன ஒழிப்பு யுத்தத்திற்கு தயார்படுத்தப் படு கின்றது. இதற்கு முன்னேடியாக சிங்கள இராணுவம் இன ஒழிப்பு வேலைகளைத் தமிழர் கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் ஆரம்பித்துள்ளது. அப்பாவித் தமிழர்கள் எவ்வித கேள்வி முறையின்றி சுட்டுக் கொல் லப்படுகின்றனர் அண்மையில் யாழ்நகர், சுன்னகம், மல்லாகம் ஆகிய இடங்களில் பொது மக்களை ராணுவம் இரக்கமற்று சுட்டுத்தள்ளியுள்ளது. இதில் முதியோர், பெண்கள், குழந்தைகள் உட்படப்பலர் மரணமடைந்தனர்.

மொத்தத்தில் சிறீலங்கா அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், பல பிற் போக்கு நாடுகளினதும் உதவியுடன் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு, தமிழர்களின் மேல் இன ஒழிப்பு வேலையை ஆரம்பித்துள்ளது. நவீன ஆயுதங்களால் ஆயுத பாணியாக்கப் பட்ட அரசுப்படைகள், இன வெறியூட்டப் பட்ட சிங்கள இளைஞர்கள், மாணவர்களால் ஆக்கப் பட்ட படைகள், அமெரிக்க ஏகாதி பத்தியம் போன்ற சிறீலங்காவின் இனஅழிப்பு வேலைகளுக்கு உதவிவரும் ஏனைய பிற்போக்கு சக்திகளுக்கும் எதிராக நாம் போராட வேண்டியதுடன், உடனடியாக எமது மக்

களைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளிலும் ஈடுபடுவது அவசியமாகும். இது இயக்கங்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலமே முன்னெடுக்கப்பட வேண்டும். ஆகவே இயக்கங்கள் தம்மிடையே தேவையற்று முரண்படுவதை விடுத்து எமது பொது எதிரிக்கெதிரான போராட்டத்தில் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது. உடனடித் தேவையாகும். மக்களும் இதனையே எதிர்பார்க்கின்றனர்.

கடந்த காலங்களில் இயக்கங்களிடையே ஐக்கிய முன்னணிகட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இவையாவும் இறுதியில் தோல்வியைத் தழுவின. சகல இயக்கங்களும் இணைந்து ஒரு ஐக்கிய முன்னணிகட்ட முடியாவிடினும், சில இயக்கங்கள் இணைந்து ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கின. பின்னர் அதுவும் செயலற்று தோல்வியையே தழுவியது. இதன் பின்னர் மீண்டுமொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதுவும் இறுதி நேரத்தில் தோல்வியடைந்து, தற்போது மூன்று இயக்கங்கள் சில உடன்பாடுகளின் கீழ் ஐக்கியப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளன. இவ் ஐக்கியம் தொடரவேண்டும். ஏனைய இயக்கங்களும் எதிர்காலத்தில் ஒன்றிணைந்து ஓர் ஐக்கிய முன்னணியாக உருவாகி, சிறீலங்கா அரசுக்கும், அதன் இன அழிப்பு வேலையில் உதவிவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், மற்றும் பிற்போக்கு நாடுகளும்க்குஎதிரான போராட்டத்தை முன்னெடுக்கவேண்டியது கடமையாகும்.

கடந்த காலங்களில் ஐக்கியத்திற்கான முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தன, என்பதற்கான காரணங்களை ஆராய்வதும் அதை நீக்குவதும் தான் எதிர்காலத்தில் சிறீலங்கா அரசுக்கு எதிரான போராட்டத்தில் சகல இயக்கங்களையும் ஒன்றிணைக்கும். ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் மாவோ தலைமையிலான சீனக் கம்யூனிசக்கட்சி ஆளும் பிற்போக்கு சியாங்கை சேக்கும்பலுடன் ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்டி பொது எதிரியான ஜப்பானைத் தோற்கடித்தது. ஒரு பொது எதிரியைத் தோற்கடிக்க இரு எதிரிகள் கூட்டுச் சேரமுடியுமெனில், ஏன் ஒரே அடிப்படை நோக்கங்களைக் கொண்ட எமது இயக்கங்கள் கூட்டுச் சேர்ந்து போராட முடியாமல் தமக்குள் முரண்பட்டு நிற்கின்றன? பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைத் துப்பாக்கி முனையில் தீர்க்கமுயல்வது ஏன்? எமது எதிரியான சிறீலங்கா அரசிற்கும் அதன் கூலிப் பட்டாளத்திற்கும். எதிராக நீட்டப்பட வேண்டிய துப்பாக்கிகள் இயக்கங்களிடையேயும் இயக்கத்திற்குள்ளும் நீளுவது ஏன்? கடத்தல், கட்டிவைத்து அடித்தல், சுடுதல் போன்ற வழிகள் மூலமே தீர்வுகள் கொடுக்கப்படுகின்றன இது இயக்கங்களிடையே பிளவை உண்டாக்கி எதிரியை மறந்து, போராளிகளுக்கிடையிலான 'ஒழிப்புப்' போராட்டத்திலேயே கொண்டுவந்துவிடும். இது எதிரி, விடுதலைப் போராட்டத்தை இலகுவாக நசுக்கவும், தமிழ்மக்கள் மீதான இன அழிப்பு வேலையைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் வழிவகுக்கின்ற தேயன்றி வேறெடுந்த நன்மையையும் ஏற்படுத்தப் போவதில்லை. சரியான கருத்துக்கள் சிலவற்றை முன்வைத்துப் போராட்டத்தை முன்னெடுக்க முயன்றவர்களிற் சிலரான சிவசண்முகமூர்த்தி (சுந்தரம்) உமைகுமாரன், இறைகுமாரன், ஒபராய்தேவன் போன்றோர்சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனால் லாபம்அடைந்தவர்கள் இனவெறிபிடித்த சிறீலங்காவின் ஆளும் பாசிசக் கும்பலும், மக்களைப் புரட்சிகரப் போராட்டத்தில் ஈடுபடுத்தாது விடுதலை போராளிகளை ஜே. ஆருடன் சேர்ந்து பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திய புள்ளடிப்பாராளுமன்றம், பேச்சுவார்த்தை, சமரசம், அஹிம்சைப் போராட்டம் என்று மக்களைக் குழப்பித் தமது சுயலாப வேட்டையாடும் பிற்போக்குத் தமிழ்த் தலைமைகளுமாகும்.

தமிழ் மக்களைத் தேர்தல் காலங்களில் மட்டும் அரசியலில் பங்கெடுக்கச் செய்து பாராளுமன்றம் சென்று திறமையாகச் சொற்பொழிவு, ஆற்றல், சமரசம் பேசல், சரணடைதல் ஆகியவற்றைத்தவிர உருப்படியான எந்தப் போராட்டத்தையும் நடாத்தாமல், மக்களை ஏமாற்றி வந்த தமிழ்த் தலைவர்கள்—தளபதிகளை அம்பலப் படுத்தி

மக்களைப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்திற்கு தூண்டிய தோழர் சிவசண்முகமூர்த்தி (சுந்தரம்), மற்றும் தமது வாழ்நாள் முழுவதும் இந்தத் தமிழ்த் தலைவர்களை அம்பலப்படுத்தி அவர்களின் முகத்திரையைக் கிழித்து, இந்த அம்பலப்படுத்தலை மக்கள் மத்தியில் வெகுஜன வேலைகளால் சாதித்த, ஓர் ஆயுதப் போராட்ட வழி இயக்கத்திற்கு ஆதரவு நல்கிவந்த உமைகுமாரன், இறைகுமாரன் போன்ற விடுதலைப் போராளிகளைப் பயங்கரவாதிகளாக வர்ணித்த தலைவர்களையும் அவர்களின் தேர்தல் பாதையையும் வன்மையாகக் கண்டித்த—விடுதலையின்பால் மற்றும் உறுதியும், நம்பிக்கையும் கொண்டிருந்து இயக்கங்களிடையே ஒற்றுமையையும் முரண்பாடுகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்படவேண்டும் என்ற—ஆயுதங்கள் எதிரிக் கெதிராக மட்டுமே நீட்டப்பட வேண்டுமே ஒழிய சகவிடுதலைப் போராளிகளுக்குஎதிராக அல்ல எனவலியுறுத்திவந்த—போராளிகள் நெருக்கடி நிலைமைகளின்போது இந்தியாவிற்குத் தப்பி ஓடாது போராட்டக் களத்திலேயே மக்களோடு மக்களாக நிற்க வேண்டுமென வலியுறுத்திய—தேவன் இன்று நம்மிடையே இல்லை ஆயினும் இவர்களின் கருத்துக்கள் சகல போராளிகளாலும் சிந்திக்கப்பட வேண்டியவை.

இப்போராளிகள் இன்று நம்மிடையே இருந்திருப்பின் விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருப்பார் என்பது கருத்திற் கொள்ளவேண்டிய தொன்று. இவர்களின் இழப்பு விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்பட்ட இழப்பே ஆகும், என்பதை சகலரும் உணரவேண்டும்.

ஐக்கியம் என்பது எல்லா இயக்கங்களும் ஒன்று கலந்து ஒரு இயக்கமாக உருவாவது என்று கருத்துப் படாது அத்துடன் வெறும் நட்பின் அடிப்படையிலோ அல்லது ஓர் இயக்கத்திற்கு எதிராக ஏனையவை கூட்டுச் சேர்வது என்ற அடிப்படையிலோ அல்லது தமது நலன்களுக்காக ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க முயல்வதோ நிலைக்காது. போராட்டம் என்பது அமைப்புக் களுக்கிடையேயான வேறுபாடுகளைத் தீர்ப்பது என்பது பரஸ்பரம், விமர்சனம் மற்றும் நட்பார்ந்த வழி முறைகளிலேயே செய்யமுடியும். இயக்கங்களிடையே ஐக்கியம், போராட்டம் என்ற இரு அம்சங்களிலும் ஒன்று கைவிடப்படினும் தவறான பாதைக்கு இட்டுச் செல்லும். ஆனால் போராட்டமானது எப்பொழுதும் ஐக்கியத்தை நோக்காகக் கொண்டதாகவே இருக்க வேண்டும். பலவிதமான கொள்கை வேறுபாடுகள், வேலைத்திட்டங்கள், தந்திரோபாயங்கள், நடை முறைத்தந்திரங்கள் போன்றவற்றின் அடிப்படையிலேயே பல் வேறு விடுதலை இயக்கங்கள் தோன்றின என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். ஆகவே விமர்சனம், கருத்துக்களை முன்வைத்தல் என்பவற்றின் மூலமே நாம் சரியான கொள்கையை, நடைமுறை என்பவற்றைக் கண்டறிந்து அதன்மூலம் இறுதி வெற்றியை அடையமுடியும். இதனடிப்படையில் ஓர் குறைந்தபட்ச வேலைத்திட்டத்தினடிப்படையிலாவது ஒன்று படுவதும் அதை அமுல் படுத்தலும்தான் ஓர் ஐக்கிய முன்னணியைத் தோற்றுவிக்க முன் முயற்சியாகச் செய்ய வேண்டியவை.

பிற்போக்கு நாடுகளின் ஆதரவுடன் தன்னைப் பலப்படுத்தி தமிழ்மக்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடாத்தி வரும் சிறீலங்கா இனவெறி அரசையும் அதன் ஆதரவு சக்திகளையும் முறியடிக்கும் முயற்சியில் ஓர் உண்மையான ஐக்கிய முன்னணி உருவாக்க சகல விடுதலை இயக்கங்களும் தீவிரமாகச் செயற்பட வேண்டியது, இன்று எம் முன்னுள்ள உடனடிக் கடமையாகும், என்பதைச் சகல போராளிகளும் உணர்ந்து செயற்பட வேண்டும். O

---

O புரட்சி யுத்தம் என்பது பொது மக்களின் யுத்தம்; பொதுமக்களை தட்டி யெழுப்பி அவர்களை சார்ந்திருந்ததால்தான் இந்த யுத்தத்தை நடத்த முடியும்.

—மாவோ

# கொந்தளிக்கும் பஞ்சாப்

அமைதிக்கும் சமாதானத்திற்கும் பெயர் போன இந்தியாவின், பஞ்சாபில் இரத்த வெள்ளத்திலே அமைதியும் சமாதானமும் (?) நிலைநாட்டப்பட்டு விட்டது. கடந்த வருடம் ஒரு அஸ்ஸாம், இந்த வருடம் ஒரு பஞ்சாப். இரத்த ஆறு ஓடவைத்து ''சமாதானத்தையும் ஜனநாயகத்தையும்'' பேணி காத்ததற்கு, கூட்டுச் சேரா இயக்கத்தின் தலைவிக்கு, உலக சமாதானத்தினதும், ஜனநாயகத்தினதும் பாதுகாவலர்கள் (!) நிச்சயம் சமாதானத்திற்கான நோபல் பரிசை வழங்குவார்கள்.

பஞ்சாப் பிரச்சனை பற்றிய பூரணமான விடயங்களை ஆராய போதிய இட வசதியும், காலமும் இடம் கொடுக்காமையால் அதனை பிறிதொரு தடவை விரிவாக ஆராய்வோம். இக்கட்டுரையில் பஞ்சாப் பிரச்சனை பற்றிய சில அடிப்படைகளை மட்டும் தருகிறோம்.

அகாலி இயக்கம் தொடங்கி நாலு வருடங்கள் முடியும் தறுவாயிலே இன்றைய சம்பவங்கள் நடைபெற்றன. 1980ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பஞ்சாபில் அகாலிதள அரசாங்கம் கலைக்கப்பட்டதிலிருந்து பிரச்சனைகள் தொடங்கின. அகாலிகள் 1981ம் ஆண்டு அக்டோபர் மாதம், மதம் மற்றும் பொருளாதாரக் கோரிக்கைகள் உள்ளடக்கிய 45 அம்சக் கோரிக்கை மனுவை மத்திய அரசிற்கு சமர்ப்பித்தது. மத்திய அரசு வழக்கம்போல போராட்டத்தை நசுக்க இரட்டை முறையைக் கையாண்டது. ஒரு புறம் பலாத்காரத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. மறுபுறம் அகாலித் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை என்ற போர்வையில் அவர்களுடன் பேரம் பேசி சீக்கிய மனித உரிமைகளை விலைக்கு வாங்க முயற்சித்தது. பல நூற்றுக்கணக்கான மக்களை 'பொய்யான' மோதலில் சுட்டுத் தள்ளியது. அகாலித் தலைவர்களோ, இவற்றுக்கு முகம் கொடுக்கமுடியாது பொற்கோயிற்குள்ளும் வேறு கோயில்களிலும் தஞ்சம் புகுந்தனர். இன்று இப்போராட்டம் வெறும் மதக் கோரிக்கையின் எல்லைக்குட்பட்ட இயக்கமாகக் காட்டப்பட்டாலும், மூடக்கப்பட்டாலும் உண்மை அதுவல்ல.

சீக்கிய மதம் 15ம் நூற்றுண்டில் தோன்றிய மதம். ஆரம்பத்திலிருந்து இதனைத் தோற்றுவித்த ''குருநானக்'' இந்து மதத்தின் ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடினர். சீக்கியர், இந்து மதம், முஸ்லிம் மதம் ஆகிய இரண்டினுடைய ஒடுக்குமுறைக்கெதிராக தொடர்ந்து போராடி வந்துள்ளனர். வீரம் மிக்க சீக்கியர் பிரிட்டிசாரிற்கு எதிராக பல போராட்டங்களை நடத்தியதுடன் தமது தனித்துவத்தை நிலை நாட்டக்கூடிய சில ஜனநாயகக் கோரிக்கைகளை சுதந்திரத்திற்கு முன்பேவைத்தனர். சுதந்திரத்திற்கு முன்பே 1946ம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் சீக்கியரால் ஏற்றுக்கொள்ளப்படாத எந்த ஒரு அரசியல் சட்டமும் உருவாக்கப்படாது என்ற உறுதி மொழி 'நேரு'வால் அளிக்கப்பட்டது. 1950இல் அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது மாநிலங்களிற்கான அதிகாரங்கள் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டது. அத்துடன் சிறுபான்மை மதமான சீக்கிய மதத்திற்கு எந்தவித தனிப்பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை என்றே, சீக்கியர்கள் இந்த அரசியல் சட்டத்தை ஏற்க முடியாது என்று கூறினர். இதற்கு அகாலிதள பிரதிநிதிகள் கையெழுத்திடவே மறுத்தனர்.

1973 அக்டோபர் 17ம் தேதி ''அனந்தபூர் சாகிப்'' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது உண்மையான கூட்டமைப்பு அரசியல் சட்டத்தை-பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், தகவல் தொடர்பு, பணம் ஆகிய நான்கு துறைகள் மட்டுமே மத்திய அரசிடமும் பிற எல்லாத் துறைகளும் மாநில அரசுகளிடமே இருப்பதற்கு வழி வகுக்கின்ற அரசியல் சட்டத்தைக்-கோரியது. பின் 1978ல் அகாலித்தள தலைமை மாநிலங்களுக்கு அதிக சுயாட்சி மட்டுமே கோருகின்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. பின்னர் இவர்களது கோரிக்கை பற்றி குழப்பமேயிருந்தது. 1973, 1978இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் எது உண்மையான கோரிக்கை என்பது பற்றி குழப்பமாகவேயிருந்தது.

## இன்றைய பிரச்சனைகள்

1. சண்டிகார் பிரச்சனை : 1947இற்குப்பின் அன்றைய பஞ்சாபின் தலைநகரமாக சண்டிகார் இருந்தது. அப்போதே 'மாஸ்ட்டர் தாராசிங்' தலைமையில்சீக்கியர்கள்பெரும்பான்மையாக இருக்கக்கூடிய பஞ்சாபி சுபாவைக் கோரினர். அப்போதே இக்கோரிக்கைக்கெதிராக இந்துக்களான பஞ்சாபியரை, காங்கிரசும், ஜனசங்கமும் கிளப்பிவிட்டனர். பின் 1966இல் ஹிந்தி பேசும் மக்களைக் கொண்ட ஹரியானுமாநிலம் பஞ்சாபிலிருந்து பிரிக்கப்பட்டது. சண்டிகாரில் பஞ்சாபியர் கூடுதலாக இருந்தும் சண்டிகார் ஹரியானுவிற்கும், பஞ்சாபிற்கும் தலைநகராக வைக்கப்பட்டது. சண்டிகார் பஞ்சாபிற்கு சேருவதற்கு அதிக நியாயம் உண்டு.

2. நீர்ப்பங்கீடு : பஞ்சாப் முன்பு ஐந்து நதிகள் பாயும் பிரதேசமாக இருந்தது. பாகிஸ்தான் பிரிக்கப்பட்டபின் ரவி, பீஸ், சட்லெஜ் என்ற மூன்று நதிகள் இங்குள்ளன. இன்று இங்கு தண்ணீர்ப் பிரச்சனை முக்கியப் பிரச்சனையாகிவிட்டது. டில்லி, ஹரியாணு, ராஜஸ்தான் பகுதிகளிற்கு நீர் பங்கிடப்படுவதால் பஞ்சாபிற்கு நீர் போதாமை உண்டு. பசுமைப் புரட்சியின்பின் மேலும் நிலங்கள் சீரமைக்கப்பட்டு விவசாயத்திற்கு உட்படுவ

தாலும் நீர்ப்பாசனத் தேவை அங்கு பன் மடங்கு அதிகரித்துவிட்டது.

ஒரு பஞ்சாபி விவசாயி தண்ணீருக்காக கொலை புரியவும் தயாராக இருக்கிறுன். இதனைத் தீர்க்க மத்திய அரசு எதுவும் செய்யவில்லை.


3. 'குருத்துவரா' சட்டம் : (Gurudwara) 1920இல் ஆதரிக்கப்பட்டு இருந்த வரையில் நிலைத்து இருந்த மகந்தர்களை அகற்ற வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டப் போராட்டம் நடாத்தியதால் அகாலிக் கட்சி உருவாகியது. இந்த இயக்கத்திற்கு பரந்த ஆதரவு கிடைத்ததை கண்டு ஐரீசிய பிரிட்டிஷார் அப்போதைய பஞ்சாபில் 'குருத்துவரா' நிர்வாக பொறுப்பை ஒரு சட்ட மூலம் உருவாக்கப் பட்ட சிரோமணி குருத்துவரா பிரபந்தக் கமிட்டி (S.G P.C.)இன் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் விட்டது. S.G.P. கமிட்டியிடம் ஹரியாணு, ஹிமாலப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் உள்ள எல்லா குருத்துவராக்களின் பொறுப்பும் விடப்பட்டிருக்கிறது. தற்போது அகாலிகள், 'டில்லி', 'பாட்ணு' மற்றும் பகுதிகளில் உள்ள குருத்துவராக்களும் S.G.P. கமிட்டியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும் என்று கோருகின்றனர். இது முழுக்கமுழுக்க சீக்கிய இனத்தவரின் பிரச்சனை என்ற வகையில் அவர்களுடன் ஆலோசித்தே முடிவு செய்தல் வேண்டும். ஆனுல் மத்திய அரசு சீக்கியருடன் ஆலோசியாமல் 'அகில இந்திய குருத்துவராச் சட்டம்' இயற்றியதுடன் S.G.P. கமிட்டியின் உள் விவகாரத்திலும் தலையிட்டு வருகிறது.

பசுமைப்புரட்சியின் கேந்திரஸ்தானமான பஞ்சாப் இந்தியாவின் கோதுமை உற்பத்தியில் 40 சதவிகிதத்தையும் அரிசி உற்பத்தியில் 48 சதவிகிதத்தையும் உற்பத்தி செய்கிறது. பஞ்சாபில் 52 சதவிகித பிரதிநிதித்துவம் கொண்ட சீக்கியரின் மொத்த ஜனத்தொகை. 1 கோடி 50 லட்சம் ஆகும். இந்தியாவின் ஏனைய பகுதிகளில் 40 லட்சம் பேரும் வெளிநாடுகளில் 30 லட்சம் பேரும் வாழ்கின்றனர் பஞ்சாபில் சீக்கியர் பிரதானமாக விவசாயத்தில்ஈடுபட்டுள்ளனர். வியாபாரம் பெரும்பான்மையாக இந்துக்கள் கையிலுள்ளது. விவசாயப் பொருட்களின் விலை அப்படியே இருக்க இரசாயனப் பொருட்கள் போன்றவற்றின் விலை அதிகரிகரித்த வண்ணமேயுள்ளது. பஞ்சாபில் கைத்தொழில் அபிவிருத்தியில்லை. விவசாயம் நெருக்கடிக்குட்பட்டுள்ளது. இந்த அடிப்படைகளிலேயே சீக்கியரின் பிரச்சனைகள் உள்ளன. இதனை வெறும் இனமதக் கோரிக்கைகளுக்குள் முடக்கி பொற்கோவிலின் நான்கு சுவர்களுக்குள் முடங்கியவர்களில் பிரதானமானவர் சந்த ஹர்சந்த் சிங் லோங்கவால் ஆவார். இவர் மிதவாதியாகவே இருந்தார். காலிஸ் தானிய கோரிக்கையை முனவைத்த உயர்மட்ட தலைவர்களான சவுகன், தில்லான் ஆகிய இருவரும் வெளிநாடுகளிலேயே உள்ளனர். இவர்கள் கேட்கும் காலிஸ்தான் குறுகிய நோக்கம் கொண்டது. அவர்களது காலிஸ்தானில் சீக்கியரல்லா தோர் நிதி, நிர்வாகம், இராணுவம் ஆகியவற்றில் பதவியிலிருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். சீக்கியமதத்திற்கெதிராக பிரச்சாரம்செய்யவோ நாஸ்திகப் பிரச்சாரம் செய்யவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள், என்றும் கொள்கைகளை முன்வைத்தார்கள். இவர்களுக்கு அதிகம் சொல்வாக்கு இல்லை. தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் சந்த் ஜர்னைல் சிங் பிந்தரன்வாலே. இவர் தமது இயக்கத்திற்கு எதிரானவர்களை அழித்தல் மற்றும் இந்து தீவிர வாதிகளை அழித்தல் மற்றும் படை அதிகாரிகளை (தனிநபர்களை) அழித்தல் போன்ற நடவடிக்கைகளைச் செய்தார். ஆயுதப் போராட்டத்தை முன் னெடுத்தவர் என்றவகையில். இளைஞர்களிடையே பரந்த செல்வாக்கு உள்ளவர்.

இவரது நடவடிக்கைகள்தீவிரமடையவே இராணுவம் பலரைக் கைது செய்தது; பலரை சுட்டுக் கொன்றது; பல கற்பழிப்புகள் போன்ற அட்டூழியங்களைச் செய்தது. இறுதியில் இராணுவம் ஒரு பெரிய யுத்தத்தையே தொடுத்து பொற் கோவிலுக்குள் நுழைந்தது. பொற்கோவிலில்செய்யப்பட்டபடுகொலைகள் பற்றிய விபரம் வெளியில் முழுமையாகத் தெரியாதபடி தடுக்கப்பட்டுள்ளது. ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள். பல நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கிறுர்கள் பொற் கோவிலுக்கு இரத்த ஆறு ஓடியது. சீக்கியரின் வீரத்தை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. லோங்க்வால் சரணடைந்த போதிலும் பிந்தரன்வாலே இறுதிவரை போராடி வீரமரணமடைந்தார்.

தமிழீழப் போராளிகள் இதிலிருந்து சில படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளலாம். சரியான வழியில் மக்களை அணி திரட்டி மக்கள் போராட்டத்தை முன்னெடுக்காவிடின் நவீன ஆயுதங்களிலிருப்பினும் பல துணிவுள்ள திறமைகொண்ட வீரர்கள் இருப்பினும் வெற்றி பெற முடியாது எனபதை புரிந்துக் கொள்ள வேண்டும். மக்களே வரலாற்றை உருவாக்கும் உந்து சக்தி கொண்டவர்கள்.

இப்போராட்டம் சில தவறுன நடைமுறைகளைக் கொண்டிருந்தாலும் எமது தலைவர்களைப்போல் ''தம்பிமார் போராடிச் சாகட்டும் நாம் போய் சாத்தானின் துணையுடன் ஆட்சி நடத்திடுவோம்'' என்று அரசு விருந்தினர் விடுதியில் இருக்காமல் களத்தில் வீர மரணமடைந்த 'பிந்தரன்வாலே'யின் வீரம்மிக்க பற்றுறுதியும் தியாகமும் மதிக்கப்படவேண்டியதொன்றே. ●




இரா. ஜெயச்சந்திரன்

# உங்கள் மரணம் மகத்தானது
# உங்கள் மரணம் வலுமிக்கது
# உங்கள் மரணம் வரலாறுனது

1984, ஏப்பிரல் மாதம் சிங்கள ஆயுதப் படையினருடன் நடந்த நேரடி மோதலில் உயிர் நீத்த 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழக'த்தைச் சேர்ந்த இரா. ஜெய்ச் சந்திரன், சிங்கள இராணுவத்தினரால் படுகொலை செய்யப் பட்ட கேதீஸ்வரன், கிருபாகரன் ஆகியோருக்கும் மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஏனைய விடுதலைப் போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இலக்கு தன் வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.



கேதீஸ்வரன்



கிருபாகரன்

''விடுதலைக்காக கொலை செய்யப்பட்ட கல்லறைகளில் விடுதலை விதை வளராத கல்லறை எதுவும் இல்லை.''